இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 03 | திகதி : 14.03.2021 | விலை : 30.00

## அரசே! இரணை தீவை கொரோனாப் புதைகுழியாக்க வேண்டாம்

### யாழ். மறைமாவட்டத்தின் ஏகோபித்த வேண்டுகோள்




கொரோனாத் தொற்றிற்குள்ளாகி மரணித்த முஸ்லிம் சகோதரர்களின் உடல்களை இரணைதீவில் அடக்கம் செய்ய அரசு எடுத்த முடிவுக்கு எதிராகக் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று கடந்த ஞாயிறு (07.03.2021) அன்று நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட இக்கவனயீர்ப்புப் போராட்டம் ஞாயிறு காலைத் திருப்பலியைத் தொடர்ந்து யாழ். மறைமாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் அமைதியாக நடைபெற்றது. திருப்பலியைத் தொடர்ந்து பங்குத்தந்தையர்களுடன் இணைந்து இறைமக்கள் பதாதைகள் ஏந்தி அமைதியாகத் தம் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இரணைதீவுமக்கள் கடந்த யுத்தகாலத்தில் வெகுவாகப் பாதிக்கப்பட்டு மீளத் தம் வாழ்வைக் கட்டியெழுப்பும் இவ் வேளையில் இத்தீர்மானமானது இரணைமாதா நகர் மக்களுக்குப் பெரும் பாதிப்பை விளைவிக்கும். எனவே இத் தீர்மானத்தை உடன் நிறுத்துமாறு அரசை வலியுறுத்தியே இப்போராட்டம் அமைந்தது.

இத் தீர்மானத்தைக் கண்டித்து யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு ஓர் கண்டன அறிக்கையையும் வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில் 100 சதவீதமான கத்தோலிக்கர் செறிந்து வாழும் இரணை தீவில் கொரோனா நோயினால் இறப்போரை அடக்கம் செய்யும் தீர்மானமானது இரணைதீவு மக்களுக்கு மட்டுமல்ல யாழ். மறைமாவட்டத்துக்கே பேரதிர்ச்சியாக அமைந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கரித்தாஸ் குடும்பத்தின் வடக்குநோக்கிய நட்புறவுப் பயணத்தின் மரம் நடுகை



எழுதுமட்டுவாளில் அமைந்துள்ள ஆயர் ஜஸ்ரின் தோட்டவளாகத்தில் மரம் நடுகை விழா கடந்த மார்ச் 9ம் திகதி இடம் பெற்றது. கரித்தாஸ் குடும்பத்தின் வடக்கு நோக்கிய நட்புறவுப் பயணத்தின் செயற்திட்டமாக இம்மரம் நடுகை விழா அமைந்திருந்தது. அனைத்து மறைமாவட்ட கரித்தாஸ் நிறுவனங்களினாலும் சேகரிக்கப்பட்ட பயன்தரு மரங்கள் யாழ். கொணரப்பட்டு நடுகை செய்யப்பட்டன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக கரித்தாஸ் நிறுவனத்தின் தேசிய இயக்குநர் அருட்பணி. மகேந்திர குணதிலக்க அடிகளும், யாழ். உதவி அரச அதிபர் திருமதி. கிருசாந்தி கமலராஜன் அவர்களும், வடக்கின் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் WLPW. பெரேரா அவர்களும் கலந்து சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வுகள் அனைத்தையும் யாழ் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி. எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் மிகவும் சிறப்புற ஒழுங்குசெய்திருந்தார்.

## உலக முக்கியத்துவம் வாய்ந்த திருத்தந்தையின் ஈராக் திருப்பயணம்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஈராக் நாட்டுக்கு கடந்த வாரம் மேற்கொண்ட திருத்தூதுப் பயணம், உலக முக்கியத்துவம் வாய்ந்ததென அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

திருத்தந்தையின் ஈராக் திருத்தூதுப் பயணம், உரையாடல் கலாசாரத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது.

இப்பயணம், மனிதகுல உடன்பிறப்புநிலையின் விழுமியங்கள் ஊக்குவிக்கப்படுவதற்கு மேற் கொள்ளப்பட்ட முக்கியமான முயற்சி என்று, மனித உடன்பிறப்புநிலையின் உயர் அவை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈராக்கில் திருத்தந்தை மேற்கொண்ட இந்த நான்கு நாட்கள் பயணத்தின்போது, பாக்தாத், நஜாஃப், எர்பில், மோசூல், ஊர் ஆகிய நகரங்களுக்குச் சென்ற திருத்தந்தை, ஊர் நகரில் நடைபெற்ற பல்சமய கூட்டத்தில், மனித உடன்பிறப்பு நிலையை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு, அனைத்து மத நம்பிக்கையாளர்களும், மனித உடன்பிறப்புநிலையின் மதிப்பீடுகளுக்கு உயிர் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## ஆயர்கள் பேரவையின் விசேட அறிக்கை

ஈஸ்ரர் தாக்குதல் நடைபெற்று இரண்டு ஆண்டுகளின் பின் விசாரணை அறிக்கை வெளியிடப்பட்ட நிலையில் அவ் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் உடனடியாக செயற்படுத்தப்பட வேண்டும் எனவும், சட்டமா அதிபருக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டு இத் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் பாரபட்சமின்றி நீதிக்கு முன் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் வேண்டி இலங்கை ஆயர் பேரவை ஓர் விஷேட அறிக்கை ஒன்றைக் கடந்த 9ம் திகதி வெளியிட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் உறவுகளும் பாதிக்கப்பட்டோரும் நீதிகோரி நிற்கும் நிலையில் அவர்களுக்குரிய நீதியை வழங்குமாறும். இவ் அறிக்கை வலியுறுத்தி நிற்கின்றது.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்.** (தி.பா : 127:1)

## எமது எண்ணம்

### ஜெனீவா அமர்வும் தமிழர் தாயகத்தின் காணி ஆவணங்களும்

ஜெனீவாவில் இலங்கைக்கான பொறுப்புக்கூறல், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்துவது என்பது குறித்துப் பேசிக்கொண்டிருக்கும் நிலையிலும், கடுமையான எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் தமிழர் தாயகத்தின் வட மாகாணத்திற்குரிய அனைத்துக் காணிக ளுக்கான ஆவணங்களும் அநுராதபுர மாவட்ட செயலகத்திற்கு திங்கட்கிழமை இரவு எடுத்துச் செல்லப் பட்டிருக்கின்றன. கடந்த 4 ஆம் திகதி ஆவணங்களை எடுத்துச் செல்ல முற்பட்டபோது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் பொது மக்களும் யாழ்.செயலக வாசலுக்கு முன்பாக ஒன்று கூடிக் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். ஆனால் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் முடிவு என்றும் தன்னால் எதுவும் செய்ய முடியாது எனவும் யாழ்.மாவட்ட அரச அதிபர் அப்போது தெரி வித்திருந்தார். இந்த நிலையில் திங்கட்கிழமை இரவு அவசர அவசரமாக அனைத்து ஆவணங்களும் அள்ளிச் செல்லப்பட்டன. 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தின் படி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குக் காணி அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால் இன்று வரை அது நடை முறைக்கு வரவில்லை. இந்த நிலையில் ஏற்கனவே வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் காணிகள் அபகரிக்கப் பட்டுச் சிங்களப் பிரதேசத்தைச் சேர்ந்த தனியாருக்கு விற்கப்பட்டு வந்தன.

சில தனியார் நிறுவனங்களுக்குக் குத்தகைக் கும் கொடுக்கப்பட்டு வந்தன. பௌத்த விகாரை களுக்கும் புத்தர் சிலை வைப்பதற்கும் இலங்கை தொல் பொருள் திணைக்களத்தால் அனுமதியும் வழங்கப் பட்டுவந்தது. இந்த நிலையில் வடமாகாணத்திற்குரிய அனைத்துக் காணி ஆவணங்களும் அநுராதபுரத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

இதனால் வடமாகாணத்தில் உள்ள அனைத்து அரச காணிகள் பொதுக் காணிகள் கொழும்பை மையப் படுத்திய அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் பகிரங்க மாகச் செயற்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்திற்குரிய காணி ஆவணங் கள் அனைத்தும் திருகோணமலை செயலகத்தில் இருந்தாலும் அங்கு சிங்கள அதிகாரிகள் பணியாற்று கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஈழத்தமிழர் அரசியல் போராட்டம் 70 ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையில் இன்றும் இந்த காணி அபகரிப்புத் தொடர்கின்றது.

1948 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணம் திருகோ ணமலையில் ஆரம்பிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றம் 1983 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த தால் அச்சத்தின் காரணமாகத் தற்காலிகமாகக் கைவிடப் பட்டிருந்தது. ஆனாலும் தமிழ் பேசும் மக்களின் கிழக்கு மாகாணம் திருகோணமலையில் சிங்கள் குடியேற்றம் இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப் புடன் நடைபெற்றது. சிங்களக் குடியேற்றங்களைச் செய்வதற்காகத் திருகோணமலை மக்கள் அச்சுறுத்தப் பட்டார்கள் இதனால் பலர் பாரம்பரியப் பிரதேசங்க ளில் இருந்து வெளியேறினர்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து கிட்டத்தட்ட 20 ஆயிரம் குடும்பங்கள் தங்களுடைய நில புலங் களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். மேலும் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் இராணுவத்தினரின் தாக்குதல் அச்சத்தினால், தாங்களாகவே வெளியேறி விட்டனர். முஸ்லிம்களின் காணிகளும் அபகரிக் கப்பட்டுள்ளன.

முஸ்லிம்களின் காணிகளில் புத்தர் சிலைகள் பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. அதற்கான வரலாற்று ஆதாரங்களும் செயற்கையாகவே தயாரிக்கப் பட்டிருக்கின்றன. இவ்வாறானதொரு நிலை வட மாகாணத்திற்கும் வந்துவிடுமோ என்ற சந்தேகத்தையே காணி ஆவணங்கள் எடுத்துச் செல்லப்பட்ட செய்தி கோடிட்டுக்காட்டுகின்றது.

## ஆண்டவரோடு 24 மணி நேரங்கள்

“உலகில், கொரோனா பெருந்தொற்றின் அச்சுறுத்தல் தொடர்ந்து நிலவிவந்தாலும், இவ் வாண்டும், “ஆண்டவரோடு 24 மணி நேர இறை வேண்டல்” என்ற பக்திமுயற்சியைக் கடைப்பிடிக்கு மாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கத்தோலிக் கர் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

திருத்தந்தையின் இந்த அழைப்புப் பற்றிய தகவல் வெளியிட்ட புதியவழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவை, தவக்காலத்தின் நான்காம் ஞாயிறன்று கடைப்பிடிக்கப்படும் ‘மகி ழும் ஞாயிறு’க்கு முந்தைய வெள்ளி, சனி, ஆகிய இரு நாட்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற இந்த பக்தி முயற்சி, இவ்வாண்டு, மார்ச் மாதம் 12 மற்றும், 13ம் திகதிகளில் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

“அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கிறார்” (தி.பா.103:3) என்ற திருப் பாடல் சொற்கள், இவ்வாண்டில் கடைப்பிடிக்கப் படும், “ஆண்டவரோடு 24 மணி நேர இறை வேண்டல்” பக்திமுயற்சியின் தலைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

அனைத்துக் கிறிஸ்தவ சமுதாயங் களும், இந்த பக்தி முயற்சியைக் கடைப் பிடிப்பதற்கு உதவியாக, புதியவழி நற்செய்தி அறிவிப்புத் திருப்பீட அவை, சிறிய வழிகாட்டிக் கையேடு ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

கத்தோலிக்கர் அனைவரும், ஆண்டவரோடு 24 மணிநேரம் இறைவேண்டலில் செலவழிப் பதற்கு நேரம் ஒதுக்கி, ஒப்புரவு அருட்சாதனத் தைப் பெற்று, இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு இறைவேண்டல் செய்யவும், தியானம் மேற்கொள்ளவும் அழைக்கப்படுகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

2014ம் ஆண்டிலிருந்து, புதியவழி நற்செய்தி அறிவிப்பு திருப்பீட அவை, “ஆண்டவரோடு 24 மணி நேர இறைவேண்டல்” என்ற பக்தி முயற்சியை, ஏற் பாடு செய்து நடத்திவருகிறது. 2015ம் ஆண்டு திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட தவக்காலச் செய்தியில், இந்த பக்திமுயற்சியில் கத்தோலிக்கர் அனை வரும் பங்குபெறுமாறு கேட்டுக்கொண்டார்.

### “உடன்பிறந்த நிலை” ஈராக், உலகிற்கு சவால்

கடந்த மார்ச் 05, முதல், 08ஆம் திகதி வரை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், “நீங்கள் யாவரும் சகோதரர், சகோதரி கள்” (மத்.23:8) என்ற இயேசுவின் திருச் சொற்களை மையப்படுத்தி, ஈராக் நாட்டுக்கு தனது முதல் திருத்தூதுப் பயணத்தை மேற்கொண்டார்.

இதுவரை திருத்தந்தையர் திருத்தூதுப் பயணம் மேற்கொள்ளாத நாடாக இருந்த ஈராக்கில், தான் மேற்கொண்ட திருத்தூ துப் பயணம் பற்றிய தன் எண்ணங்களை, மார்ச் 10 ஆம் திகதி மறைக்கல்வி உரை யில் பகிர்ந்துகொண்டார், இத்தாலியில் கோவிட்-19 பெருந்தொற்று கட்டுப்பாட்டு விதிமுறைகள் தொடர்ந்து கடைப்பிடிக் கப்பட்டு வருவதையொட்டி, மறைகல்வியு ரையை, வத்திக்கானில், தன் நூலக அறையிலிருந்தே திருத்தந்தை வழங்கி னார்.

### பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் அன்பிய கருத்தூட்டல் நிகழ்வு

பருத்தித்துறை மறைக்கோட்ட அருட்பணிச் சபை உறுப்பினர்களுக்கான அன்பியக் கருத்தூட்டல் கடந்த 07.02.201 ஞாயிற்றுக்கிழமை மறைக்கோட்ட முதல் வர் அருட்பணி A.F. பெனற் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

அன்பிய அறிமுகவுரையை யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி P.J.ஜெபரட்ணம் அடிகளார் வழங்கினார். அன்பிய இணைப்பாளர் அருட்பணி ஞானரூபன் மற்றும் மறைக்கோட்ட அருட்தந்தையர்களும் பங்குபற்றினர்.

### கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் அன்பிய கருத்தூட்டல் நிகழ்வு

கிளிநொச்சி மறையாசிரியர்களுக்கான புனித சூசையப்பர் ஆண்டு மற்றும் அன்பிய ஆண்டு அமர்வு இடம்பெற்றது. யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி X.W.ஜேம்ஸ் அடிக ளாரால் ஒழுங்குபடுத்தப்பட்ட இக்கருத்த மர்வை மறைக்கோட்ட முதல்வர் தலைமை தாங்கினார். சூசையப்பர் ஆண்டு பற்றி அருட்பணி போல் அனக்கிளிற் அடிகளாரும் அன்பிய ஆண்டு பற்றி அருட்பணி சசிகரன் அடிகளாரும், அன்பிய செயற்திட்டம் பற்றி அருட்பணி சுலக்சன் அடிகளாரும் கருத்தமர்வை நடத்தினார்கள்.


**நீங்கா நினைவில் 7ம் ஆண்டு**



மண்ணில் 23 11 1935

விண்ணில் 15 03 2014

அமரர்

**அருளானந்தம் திரேசம்மா**

அம்மா உங்களை அன்போடு நினைக்கின்றோம்

நெஞ்சினிலே நிலையாக நின்று
நினைவுகளில் மகிழ்வைத் தந்து
இறைவனிடம் அமைதியாகத் தூங்கும்
எமது அன்புத் தாயின் ஏழாம் ஆண்டு
நினைவிற்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கள் மறைந்து ஏழாண்டு ஆனாலும்
உங்களை நினைத்து நெஞ்சம் அழுகின்றது.
ஏழாண்டென்ன, ஆண்டுகள் பல ஆனாலும்
மறவோம் நாம் உம் அன்பு முகம்.

இறைவா, நீர் தந்த எம் அன்பு அன்னைக்காய்
நன்றிக்கரம் குவிக்கின்றோம்.
அவரை உம் திருப்பாதம் சேர்த்து மகிழச் செய்யும்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

35/9, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

AD-22

**நெஞ்சகலா ஈராண்டு நினைவஞ்சலி**



உறவில் 14 . 06 . 1942

பிரிவில் 26 . 03 . 2019

அமரர்

**திருமதி மரியா மின்னொளி ஜூலியன்**

(லூர்த்துமலர்)

குடும்பத்தின் குலவிளக்காய்,
பாசத்தின் ஒளி விளக்காய்,
பண்பின் சிகரமாய்,
வாழ்வின் வழிகாட்டியாய்
எம்முடன் வாழ்ந்த
எமது ஆருயிர் அன்னையே
காலத்தின் கணக்கில்
நீங்கள் விண்ணகம் போனாலும்
எங்கள் உள்ளங்களில் என்றும்
நீங்காத நினைவுகளுடன் நிலைத்திருப்பீர்கள்
உங்கள் ஆன்மா சாந்தியடைய
என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 2021.03.26 வெள்ளிக்கிழமை
காலை 6.00 மணிக்கு கண்டுக்குளி புனித திருமுழுக்கு யுவானியார்
ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.


என்றும் உங்கள் நினைவுகளுடன்

8/9 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9752 – 077 7498865

அன்புக் கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

AD-26

# திருத்தந்தையின் தவக்காலச் செய்தி



## “இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம்” (மத் 20:18)

அன்பான சகோதர சகோதரிகளே!

இயேசு தமது பாடுகள், மரணம், உயிர்ப்பைத் தந்தையின் மீட்புத் திட்டத்தின் நிறைவு என்கையில், தமது பணியின்(Mission)ஆழமானபொருளை வெளிப்படுத்தினார். உலகத்தின் மீட்புக்காகத் தமது பணியைப் பகிர்ந்து கொள்ள சீடர்களுக்கு அழைப்பு விடுத்தார்.உயிர்ப்பு விழா (Easter) நோக்கிய நமது தவக்காலப் பயணத்தில், சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச்சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டவரைப் (பிலிப் 2:8) பற்றித் தியானிப்போம். மனமாற்றத்தின் காலத்தில், நமது விசுவாசத்தைப் புதுப்பித்துக் கொள்வோம்

## தவக்காலம் : விசுவாசம் (Faith) நம்பிக்கை (Hope) அன்பை (Love) புதுப்பிக்கும் காலம்!

நம்பிக்கையின் உயிருள்ள தண்ணீரிலிருந்து (Living water of hope) முகர்ந்து கொள்வோம் நம்மைக் கிறிஸ்துவில் சகோ தரர் - சகோதரிகளாக்கும் கடவுளின் அன்பை (Love of God) திறந்த இதயங்களுடன் ஏற்றுக்கொள்வோம்.

உயிர்ப்பு விழிப்பில் நமது திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்துக் கொண்டு, தூய ஆவியாரின் செயற்பாட்டால் நிகழும் புதிய ஆண்கள் - புதிய பெண்கள்'என்னும்புதுப்பிறப்பைஉணர்வோம். இந்தத்தவக்காலத்திருப்பயணம் கிறிஸ்தவ வாழ்வின் ஒட்டுமொத்தத் திருப்பயணத்தைப்போல, நமது எண்ணங்களையும், மனநிலைகளையும், கிறிஸ்துவைப் பின்பற்றுவோரின் முடிவுகளையும் தூண்டியெழுப்பி உயிர்ப்பின் ஒளியில் மேலும் ஒளிர்வதாக!தவம் (Fasting), செபம் (prayer), தானம் (almsgiving) - இயேசு போதித்துள்ளது போல் (மத் 6:1-18) நமது மனமாற்றத்தை ஏற்படுத்தி வெளிப்படுத்துகிறது. ஏழ்மையின் வழியும், தன்மறுப்பும் (fasting), ஏழைகள் மீதான அன்பும், அக்கறையும் (almsgiving), தந்தையுடன் குழந்தை உறவாடுவது போன்ற உறவும் (prayer) உண்மையான விசுவாச வாழ்வையும், உயிருள்ள நம்பிக்கையையும் (Living Hope), பயனுள்ள அன்பையும் நாம் வாழ்வதை சாத்தியமாக்குகிறது.

**1. கடவுளுக்கு முன்பும், அனைத்துச் சகோதர சகோதரிகளுக்கு முன்பும் உண்மையை ஏற்கவும், அதற்குச் சான்று பகரவும் விசுவாசம் அழைக்கிறது ....**

இந்தத் தவக்காலத்தில், திருச்சபை காலங்காலமாக, தலைமுறை வாரியாக வழங்கி வரும் கடவுளின் வாக்கிற்கு' (God's Word) நமது இதயங்களைத் திறப்பதே, இயேசுவில் வெளிப்படுத்தப்பட்ட உண்மையை நாம் ஏற்றுக் கடைப் பிடிக்கிறோம் என்பதன் பொருளாகும். இந்த உண்மை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசில புத்திசாலிகளுக்கு மட்டுமான புரிந்துகொள்ள முடியாத புரிந்துகொள்ளக் கூடிய ஒரு செய்தி! நாம் அறிவதற்கு முன்பே நம்மை அன்பு செய்யும் கடவுளின் மேன்மைக்குத் திறந்த மனதுடைய இதயத்தின் ஞானத்திற்கு நன்றி! கிறிஸ்துவே இந்த உண்மை . மனிதத் தன்மையை ஏற்று, அதுவும் அந்த மனிதத்தன்மையின் எல்லைக்கே தம்மை வெறுமையாக்கியதால், இயேசு தம்மையே பாதையாக்கி, நம் அனைவரையும், நிறைவாழ்வுக்கு இட்டுச் செல்லும் அனைவருக்கும் திறந்துள்ள பாதைக்கு வர அழைக்கிறார்!

**தவம்** (Fasting)

ஒருவிதமான தன்மறுப்பின் வடிவம். கடவுளின் கொடையை மீண்டும் கண்டு பிடித்து, கடவுளின் சாயலாகவும், பாவனையாகவும் படைக்கப்பட்டுள்ளதைக் கண்டுணரும்போது, நாம் அவரில் நமது முழுநிறைவைக் காண்கிறோம். ஏழ்மையை அனுபவித்துக் கடைப் பிடிப்போர், தவம் (Fasting) மூலம் தங்களையே ஏழைகளுடன் ஏழைகளாக்கி, பெறப்பட்டதும், பகிரப்பட்டதுமான ஓர் அன்பின் பொக்கிஷத்தைச் சேர்த்துக்கொள்கின்றனர். இந்த வழியில் தவம் கடவுளையும், அயலாரையும் அன்பு செய்ய உதவுகிறது. புனித தாமஸ் அக்குவினாஸ் "அன்பு வெளிநோக்கி இயங்கி - பிறர்மீது நமது கவனத்தைத் திருப்பி, அவர்களை நம்மில் ஒருவராகக் கருதச்செய்கிறது" என்கிறார் (அனைவரும் சகோதரர்களே', 93).

தவக்காலம் நம்பிக்கைக் கொள்ளும் காலம். நமது வாழ்வினுள் கடவுளை வரவேற்று, நம் மத்தியில் உறைவிடம் அமைக்க (Make his dwelling place) அவரை அனுமதிக்கும் காலம் (யோவா 14:23). தவம் நுகர்வுக் கலாசாரம், அளவுக்கதிகமான தரவுகளை உண்மையா? பொய்யா? என்று அறியவியலாத நம்மைக் கீழ்நோக்கி அழுத்தும் காரியங்களிலிருந்து விடுதலை பெறவும் அனைத்திலும் ஏழ்மை நிலை போன்று, ஆனால் அருளிலும், உண்மையிலும் நிறைந்த ஆண்டவரும் கடவுளின் திருமகனுமானவர் (யோவா 1:14) நம்மிடம் வருவதற்கு நமது இதயக் கதவுகளைத் திறக்கவும் உதவுவதில் துணை புரிகிறது.

**2. நம்பிக்கை** (or) **எதிர்நோக்கு** (Hope) **உயிருள்ள நீராக நமது பயணத்தைத் தொடர உதவுகிறது .....**

இயேசு சமாரியப் பெண்ணிடம் குடிக்கத் தண்ணீர் கேட்டார். "நீ என்னிடம் கேட்டிருந்தால் வாழ்வளிக்கும் தண்ணீரைக் (Living Water) (யோவா 9:10) கொடுத்திருப்பேன்" என்று இயேசு கூறியதை சமாரியப் பெண் புரிந்துகொள்ளவில்லை. சமாரியப் பெண் இயேசு சாதாரண தண்ணீரைக் குறிப்பிடுவதாகவே புரிந்துகொண்டாள். ஆனால், இயேசு பொய்க்காத எதிர்நோக்கைப் (Hope) பொழிந்து, தமது பாஸ்கா மறைபொருள் வழியாக நிறை வாக வழங்கப்போகும் தூய ஆவியாரைப் பற்றியே குறிப்பிட்டார். இயேசு தமது பாடுகள், மரணம் பற்றிக் குறிப்பிடுகையில் 'நான் மூன்றாம் நாள் உயிர்ப்பேன்' என்று குறிப்பிடும்போதே இந்த எதிர்நோக்கு (Hope) பற்றி ஏற்கெனவே பேசியுள்ளார் (மத் 20:19). தந்தையின் இரக்கத்தால் திறக்கவுள்ள எதிர்காலத்தைப் பற்றி இயேசு பேசினார். இயேசுவுடன், இயேசுவுக்காக எதிர் நோக்கி இருத்தல் என்பது நமது தவறுகள், வன்முறை, அநீதி, அன்பை அறையும் பாகங்களுடன் வரலாறு முடிவதில்லை . இதன் பொருள் - தமது குத்தித் திறக்கப்பட்ட விலாவிலிருந்து தந்தையின் மன்னிப்பைப் பெறுதல் ஆகும்.

எல்லாமே உறுதியற்றும், நிச்சயமற்றும் உள்ள இந்தப் பிரச்சினையான காலத்தில், எதிர்நோக்கு அல்லது நம்பிக்கை பற்றிப் பேசுவது சவால் மிக்கதாக இருக்கும். இருப்பினும், தவக்காலம் அடிப்படை யில் எதிர்நோக்கின் காலம் நாம் பராமரித்துப் பாதுகாக்காத படைப்புக்களைத் தொடர்ந்து பொறுமையுடன் பராமரித்து, கடவுளிடம் திரும்பி வரும் காலம் (புகழனைத்தும் உமதே' 32-33,43-44). புனித பவுல் நம்மை ஒப்புரவில் நம்பிக்கை கொள்ளத் தூண்டுகிறார்: "கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம்" (2கொரி 5:20). நமது மனமாற்றத்தின் வழிமுறையின் இதயமாகவுள்ள ஒப்புரவு அருளடையாளத்தில் மன்னிப்பைப் பெறுவதன் மூலம், நம்மால் பிறருக்கு மன்னிப்பைப் பகிரவும், பரப்பவும் முடியும். நாமே, நமக்கான மன்னிப்பைப் பெற்றவர்களாக இருப்பதால், பிறருடன் அக்கறையோடு உரையாடலில் ஈடுபடும் விருப்பத்துடன், துன்பவருத்தத்தை அனுபவிப்பவர்களுக்கு ஆறுதலையும், ஆதரவையும் நம்மால் வழங்க முடியும். கடவுளின் மன்னிப்பு நமது வார்த்தைகள், செயல்கள் வழியாக வழங்கப்பட்டு, சகோதரத்துவ உயிர்ப்பு (an Easter of fraternity) விழா அனுபவத்தைப் பெறக்கூடியவர்களாக நம்மை மாற்றுகிறது. தவக்காலத்தில் நாம் அதிகமாக ஆறுதலான, ஊக்கமூட்டும், ஆசுவாசப்படுத்தும், வலிமையூட்டும் வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் அக்கறை காட்டுவோம். கீழ்த்தரமான, வருத்தமூட்டும், கோபம் அல்லது அவதூறான வார்த்தைகளைத் தவிர்ப்போம்" ('அனைவரும் சகோதரர்களே!' - 223). சில வேளைகளில் இரக்கத்துடன் இருப்பது அனைத்தையும் அப்புறப்படுத்திவிட்டு பிறர்மீது அக்கறை காட்டுவதும், புன்முறுவலின் கொடையை வழங்கு வதும், ஊக்கமூட்டும் வார்த்தைகளைப் பேசுவதும், பொதுவான கண்டுகொள்ளாமைக்கு மத்தியில் செவிமடுப்பதுமே பிறருக்கு நம்பிக்கையூட்டுவதற்குப் போதுமானவைகளாகும் (அனைவரும் சகோதரர்களே, 224). ஒப்புரவு மற்றும் அமைதியான செபம் நமக்கு நம்பிக்கையாகவும் (Hope), நமக்குத் தூண்டுதலாகவும் (inspiration), உள்ளார்ந்த ஒளியாகவும் (interior light) நமது பணியில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தேர்வுகளில் ஒளியூட்டி உதவக்கூடியதாகவும் உள்ளன. எனவே, செபத்திற்கான தேவையை உணரவும் (மத் 6:6), தனிமையில் தந்தையின் இளகிய அன்பை எதிர்கொள்ளவும் தவக்காலம் அழைக்கிறது. இயேசுக் கிறிஸ்துவில், புதிய உலகில் கடவுள் அனைத்தையும் புதுப்பிப்பதன் சாட்சிகளாக நாம் வளர்கிறோம் என்பதில் தான், நம்பிக்கையுடன் (Hope) தவக்காலத்தை அனுபவிக்கிறோம் என்பது அடங்கி யுள்ளது (திவெ 21:1-6). சிலுவையில் உயிரைக் கையளித்து, கடவுளால் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்துவின் நம்பிக்கையைப் (Hope) பெற்று, நாம் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து யாராவது விளக்கம் கேட்டால் விடையளிக்க எப்பொழுதும் ஆயத்தமாய் இருப்பதுவே இதன் பொருள் (1பேது 3:15).

**3. அன்பு - இயேசுவின் காலடிகளைப் பின்பற்றி, அனைவருக்குமான அக்கறை, இரக்கத்துடன் இருப்பதே நமது விசுவாசம், நம்பிக்கையின் உச்சபட்ச வெளிப்பாடாகும்.....**

அன்பு பிறர் வளர்கையில் அதைப் பார்த்து மகிழும். பிறர் வேதனைப்படுகையில், தனிமையில் தவிக்கையில், நோய்வாய்ப்படுகையில், அனாதையாகையில், ஒதுக்கப்படுகையில், தேவையில் இருக்கையில் அன்பு துன்புறும். இதயத்தின் பாய்ச்சலே அன்பு. நம்மிடமிருந்து நம்மை வெளிக்கொணர்ந்து பகிர்வு மற்றும் ஐக்கியத்தை உருவாக்குகிறது. 'சமூக அன்பு (Social Love) அன்பின் நாகரீகத்தில் (Civilization of Love) வளர்ந்து முன்னேறுவதைச் சாத்தியப்படுத்தி, நாம் அனைவரும் இந்த அன்பின் நாகரீகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளதை உணரச் செய்கிறது. உலகளாவிய அளவில் அனைவருக்கும் பொதுவான இந்த அன்பு உணர்வே, அன்பை புதிய உலகைக் கட்டியெழுப்பப்படக் கூடியதாக்குகிறது. இது வெறுமனே உணர்ச்சிப்பூர்வ மானது மட்டுமல்ல அனைவருக்குமான வளர்ச்சிக்கான ஆற்றல் மிக்க பாதைகளைக் கண்டுபிடிக்கும் வழிவகையாகும் (அனைவரும் சகோதரர்களே', 183). நமது வாழ்வுக்குப் பொருள் தரும் அருட்கொடை அன்பு. தேவையில் உள்ளவர்களை நம் குடும்ப உறுப்பினர்களாகவும், நண்பர்கள், சகோதர சகோதரிகளாகவும் பார்க்கச் செய்கிறது அன்பு. அன்புடன் கொடுக்கப்படும் சிறு தொகையும் தன்னிலேயே முடிவுறுவதில்லை. மாறாக, வாழ்வு மற்றும் மகிழ்ச்சியின் ஊற்றாகிறது. சரப்தா ஊர் கைம்பெண்ணின் கலயத்தில் இருந்த எண்ணெயும், பானையிலிருந்த மாவும் தீரவில்லை, குறையவில்லை (1அர 17:716). ஏனெனில், எலியாவிற்குத் தன்னிடமிருந்த கொஞ்ச மாவையும், எண்ணெயையும் கொண்டு உண்பதற்கு ரொட்டி சுட்டுத் தர முன்வந்தாள் கைம்பெண். அதுபோலவே, சிறுவனிடமிருந்து பெறப்பட்ட ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் இயேசுவால் ஆசி கூறப்பட்டு, சீடர்கள் வழியாக மக்க ளுக்கு வழங்கியபோது அனைவரும் வயிறார உண்டு, மீதியானதை 12 கூடைகள் நிறையச் சேகரித்தார்கள் (மத் 6:30-44). அதுபோலவே, நமது தானமும் (almsgiving) சிறிதளவோ அல்லது பெரிதளவோ, எளிமையாகவும், மகிழ்வுடனும் கொடுக்கப்படும் போது - அது கொடுப்பவரிடமும், பெறுபவரிடமும் முடிவுறாது. ஊற்றாய்ப் பெருக்கெடுக்கும். அன்புடன் தவக்காலத்தைக் கொண்டாடுவது என்பது, துன்புறுகின்றவர்கள், கைவிடப்பட்டோர், கொரோனா அச்சத்திலிருப்போர் அனைவரையும் ஆதரிப்பதாகும். கொரோனா பெருந்தொற்றின் எதிர்கால நிலை பற்றி அறிய முடியாது உறுதியற்றுள்ள நிலையில், துன்புறும் ஊழியனுக்கு வழங்கப்பட்ட கடவுளின் வார்த்தைகளை நினைவுகூர்வோம். (தொடர்ச்சி 9ஆம் பக்)

## காவலன் கலசம்

# தவக் காலமும் நமது ஆன்மீக தயாரிப்பும்



அருட்பணி. ஆ. நிர்மலராஜ் செ.தா

தவக்காலம் ஒரு அருளின் காலம். மீட்பின் காலம். மனித வாழ்வை நிறைவாழ்வுக்கு இட்டுச் செல்லும் காலம். இறைவனின் நிபந்தனையற்ற அன்பின் ஆழத்தை நிதமும் தியானித்து உள்ளம் உருகிமனம் திரும்பும் காலம். நமது வாழ்க்கைப் பாதையை திரும்பிப் பார்த்து வாழும் முறையை மாற்றி அமைக்கும் நேரம். மனம் திரும்பி நற்செய்தியை (இறைவார்த்தையின் ஒளியில்) வாழ முயலும் காலம். மனித பலவீனத்தால் பாவச் சார்புள்ள தீய உணர்வுகளால் கடவுளோடும் இயற்கையோடும் நம் உறவுகளோடும் முறித்த உறவுகளை மீளக்கட்டியெழுப்பத்தூண்டும் காலம். பூமியிலே வசந்த காலங்களில் பூத்துக் குலுங்கும் சிலமரங்களைப் போல மனிதரின் ஆன்மீக வாழ்கையை ஆசி மலர்களாக நிரப்பும் காலம். ஒரு யூதனின் சமய வாழ்க்கையில் அவனின் ஆன்மாவை அழகு செய்யும் மூன்று காரணிகள்.

1. செபம்
2. தபம் (நோன்பு)
3. தானதர்மம்.

தவக்காலம் என்றதுமே நம் மனக் கண்முன் வருவது இவைகள் தான். ஆனாலும் நம் வாழ்வு மனமாற்றம் அடையவும் மாற்றம் பெறவும் இம் மூன்று நற்செயல்கள் தான் பெரிதும் உதவுகின்றது. இவைகள் நம் வாழ்வில் ஆன்மீகத்தை வளர்க்கவும் ஆண்டவரின் அடிச்சுவட்டின் வழி யில் வாழவும் பெரிதும் உதவுகின்றது.

**1. செபம்**

செபம் என்பது ஒரு தேடல். காத்திருத்தல். இறை உடனிருப்பு என்ற உணர்வுடைமையே செபம். இதயத்தை மையப்படுத்தி அவன் தன் விழிப்புணர்வில் இறை உணர்வு கொள் வாழ்க்கை முறையாகும். செபத்தின் தன்மை இரண்டு ஆன்மாக்களின் தேடல். நம் இதயத்தை ஆண்டவரிடம் எழுப்புவது இறைவனுக்கும் நமக்குமுள்ள ஒரு தொடர் உரையாடல். புனித ஜான் மரிய வியானி கூறுகின்றார் "கடவுள் உலகை ஆளுகின்றார். செபிக்கத் தெரிந்த மனிதனோ கடவுளை ஆளுகின்றான். கடவுள் முடியாது என்று சொல்லும் போதிலும் செபிக்கத் தெரிந்த மனிதன் முடியும் என்று சொல்ல வைக்கின்றான்." எப்படிச் செபிக்க வேண்டும்? என்ற கேள்வி எழுப்பும் போது

1. நம்பிக்கையோடும்
2. விடா முயற்சியோடும்
3. தாழ்ச்சியோடும் செபிக்க வேண்டும் என்ற அழைப்பு விடப்படுகின்றது.

உதாரணமாக யூத சமுதாயம் ஒரு செபிக்கும் சமுதாயம். யூதர்களைப் பொறுத்தவரை செபம் இல்லாமல் எந்தவொரு விழாவும் இருக்காது. செபம் அவர்கள் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்டது. ஆனால் அவர்கள் வாழ்க்கையில் உண்மையான உறவை வளர்க்கவில்லை. இயேசு இதனைக் கண்டிக்கின்றார்." இம் மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலையில் இருக்கின்றது". (மாற்கு7:1-10).

செபத்தை மனித வாழ்வில் மூன்று நிலைகளில் அனுபவித்து வாழவேண்டும்.

**1. உண்மை வழி:**

உண்மை என்பது கடவுள் ஒருவர் தான் என்ற உணர்வில் உண்மையை நோக்கிப் பயணிக்க செபம் பெரிதும் உதவுகின்றது.

**2. அன்பு வழி:**

கடவுள் தம்மை அன்பு வழியில் தான் வெளிப்படுத்தினார். அன்பு வழி தான் இறைவழி. அவர் வழியில் தான் நாமும் பயணிக்கவேண்டும் மற்றும் நம் வாழ்க்கையை வாழ முயல வேண்டும்.

**3. சேவை வழி:**

உண்மையும் அன்பும் ஒருவரில் நிறைந்து விட்டால் வெளிப்படுவது தன்னளிப்பு. என் கடன் பணிசெய்து கிடப்பது. என்ற உணர்வில் நம் வாழ்வை வாழ முயல்வது. எனவே இந்த அருளின் காலத்தில் செபத்தில் ஆழம் காணமுற்படுவோம்." செபம் இல்லாத வீடு செத்த வீடு என்பார்கள்". எனவே வாழ்வின் நிலையாமை பற்றி அன்றாடம் சிந்திக்கத்தூண்டும் இந்தக் கொரோனாவின் தாக்குதல்கள் நிறைந்த காலச் சூழ்நிலை நம் வாழ்வில் நம் ஆன்மாவில் ஒரு ஆழமான மாற்றத்தை எற்படுத்த முயற்சி செய்வோம்.

**2. தபம் (நோன்பு)**

நாம் வாழும் இந்த நவீன உலகத்தில் நோன்பு என்ற மாண்பு குறைவடைந்து செல்லுகின்றது. நோன்பு பல வழிகளில் அனுசரித்தாலும். நோன்பு என்றால் என்ன? என்று கேட்கத்தூண்டுகின்றது. "அடக்கறும் புலன்களை ஐந்தடக்கி ஆசையாமைவதுடக் கறுத்தலுமே" என்பர். இன்னும் உடலை வருத்தி உணவு உறக்கம் துறந்துதவம் செய்வதும் என்றும் கூறப்படுகின்றது. நமது மனம் எப்போதுமே கேள்விகளால் நிறைந்துள்ளது. ஏன் உண்ணா நோன்பிருக்கவேண்டும்? என்பதற்கு புனித தோமஸ் அக்குவினாஸ் மூன்று விடயங்களைக் குறிப்பிடுகின்றார்.

**1.** விண்ணக விடயங்களைப் பற்றிச் சிந்திக்க மனம் இன்னும் சுதந்திரமாக இறைவன் பால் ஈர்க்கப்பட உதாரணமாகத் தானியேல் இறைவாக்கினர் மூன்று கிழமைகள் நோன்பிருந்த பின்பு இறைவனின் வல்லமையுள்ள வெளிப்பாடு பெற்றார்.

**2.** எமது காம உணர்வுகளைக் கட்டுப் படுத்துகின்றது. உதாரணமாக மாமிசத் தவிர்ப்பு மற்றும் குடிபோதை மற்றும் மது பானங்களைத் தவிர்க்க வேண்டும்.

**3.** எமது பலவீனத்தால் கட்டிக்கொண்ட பாவங்களுக்குப் பரிகாரமாக நோன்பிருப்பு துணையாக இருக்கின்றது.

உதாரணமாக யோவேல் 2:12 "இப்பொழுது உண்ணா நோன்பிருந்து அழுது புலம்பிக்கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்". நாம் எப்படி நோன்பிருக்க வேண்டும்? என்பது நமக்குள் எழும் கேள்வி. இயேசு நம்மிடம் "நோன்பிருக்கும் போது வெளிவேடக்காரர் போல முக வாட்டமாய் இருக்க வேண்டாம். மறைவாக இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதை காணும் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைமாறு அளிப்பார்." நாம் நுகர்வுக் கலாசாரமும் விளம்பரமும் நிறைந்த உலகில் வாழுகின்றோம். நோன்பின் புனிதநோக்கு. "நமது குற்றச் செயல்களுக்காக வருந்துவதும் மற்றவர்களின் தேவையைப் புரிந்து கொள்வதுமாகும்". இன்று பலரும் நோன்பை பற்றிப் பேசும் போது எனக்கு வயதாகி விட்டது. மருந்து எடுகின்றேன். ஒருவேளைகூட என்னால் சாப்பிடாமல் இருக்க முடியாது. என்று நொண்டிச் சாட்டுச்சொல்வது பழக்கமாகி விட்டது. உதாரணமாக அன்னாவின் வாழ்வு நமக்கு ஒரு பாடம்: 84 வயதில் தவறாது நோன்பிருந்து மீட்பரைக் கைகளில் ஏந்தினார். எனவே நாம் வாழும் சூழ்நிலையில் வெறும் உடல் சார்ந்த நோன்பல்ல உள்ளத்தளவில் நோன்பு என்ற மனப் பான்மையை வளர்த்துக்கொள்ள முயல்வோம். நமது அன்றாட ஆடம்பர வாழ்க்கை முறைக ளையும் செலவீனங்களையும் குறைத்து இல்லாதவர்களுடன் பகிர்ந்து வாழ முயல்வோம். அப்போது நாமும் கடவுளின் பிள்ளைகளாக வாழ முடியும் அவர் தயவில் வளர முடியும்.

**3. தானதர்மம்:**

"தர்மம் தலைகாக்கும் தக்க சமயத்தில் உயிர்காக்கும்" என்பார்கள். இறைவாக்கினர் தோபித்து 12:9" தர்மம் சாவினின்று காப்பாற்றும் எல்லாப் பாவத்தினின்றும் தூய்மையாக்கும்". யூதர்களைப் பொறுத்தவரை தர்மம் செய்வது கடவுளுக்கு ஊழியம் செய்வதாகும். இயேசு தன்னைப் பின்பற்ற வந்த இளைஞனிடம் தன்னைப் பின்பற்ற ஒன்று குறைவாக உள்ளது. உன்னிடம் உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும் என்றார். ஆனால் அந்த இளைஞனால் முடியவில்லை. சுவாமி விவேகானந்தர் கூறியது" ஏழை மக்களையே உங்கள் தெய்வமாகக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றியே சிந்தனை செய்யுங்கள். அவர்களுக்காக உழையுங்கள்" வாழ்க்கை கொடுப்பதில் தான் நிறைவுள்ளது." எல்லாரும் எல்லாம் பெறவேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்". என்பார்கள். நபிகள் நாயகத்தின் கூற்றுப் படி "அண்டை வீட்டார் பசித்திருக்க நீ உண்ணற்கஅழிபசிதீர்த்திடு. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என் பதை உணர்க. தானத்தில் சிறந்தது அன்னதானமே" என்று கூறுகின்றார். எப்படி நாங்கள் தானம் செய்ய வேண்டும்? என்ற கேள்விக்கு பரிசுத்த விவிலியத்தில் பதில் உள்ளது.

"உங்கள் வலக்கை செய்வதை இடக்கை அறியாதிருக்கட்டும்"(மத் 6:3). நாம்வாழும் காலச்சூழ்நிலை பலரின் வாழ்க்கையில் சுமைகளை அதிகரித்து விட்டது. ஒருபுறம் கொரோனாவின் அச்சத்தால் சாதாரண வேலைகளைச் செய்யத் தவிக்கும் நிலையும் மறுபுறம் பொருட்களின் விலைவாசியால் தடுமாறும் நிலையும் அதிகரித்து விட்டது. எனவே நிறைவாக உள்ளவர்கள் குறைவாக உள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்வோம். "பகிராதவர்களின் வாழ்க்கையில் பாவம் கூடுகட்டுகின்றது என்பார்கள்". எனவே வாழும் காலம் எத்தனை ஆண்டுகள் என்று யாரும் வரையறுக்க முடியாது. ஆனால் வாழும் போது ஏழை எளியவர்களின் துயர் துடைத்து வாழும் போது நமது ஆயுட்காலம் நிச்சயமாக அதிகமாகும். வாழ்க்கையும் இனிமையாகும்.எனவே இயேசுவின் கல்வாரிப் பாடுகளை சிந்திப்பதற்கும் தியானிப்பதற்கும் அவரின் காருண்யம் நம்மைத் தொடர்ந்து இந்தக் கொடியகொரோனாவின் பிடியினின்று பாதுகாக்கவும். நமக்கு தரப்பட்டுள்ள இந்த அருள் நிறைந்த புனிதம் நிறைந்த காலத்தை செபத்திலும் பரித்தியாகங்கள் (நோன்பு) மற்றும் நம்மிடம் உள்ளவற்றை பகிர்வதன் மூலம் இறைவனின் அளவிடமுடியாத அன்பையும் மன்னிப்பையும் பெற்று அவர் தயவில் வாழ முயற்சி செய்வோம்.

## தவக்காலம்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

"அஞ்சாதே, நான் உன்னை மீட்டுக்கொண்டேன். உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன்" (எசா 43:1). நமது அன்பு உதவியில் நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைப் பேசுவோம். கடவுள் அவர்களை மகன்கள், மகள்களாக அன்பு செய்கிறார் என்பதை அவர்கள் உணரும்படியாக உதவுவோம்.

"அன்பினால் உருமாற்றம் பெற்ற பார்வை ஒன்றே பிறரின் மாண்பு உணரப்படுவதற்கு உதவ முடியும். அதன் விளைவாக, ஏழைகள் ஏற்றுக்கொள்ளப்படவும், மாண்புடன் மதிக்கப்படவும், அவர்களின் அடையாளம் மற்றும் பண்பாடு போற்றப்படவும், சமூகத்தினுள் உண்மையில் ஒன்றிணைக்கப்படவும் இயலும்" ('அனைவரும் சகோதரர்களே', 187). அன்பான சகோதர சகோதரிகளே! நமது வாழ்வின் எல்லாத் தருணங்களும் விசுவசிக்கவும், நம்பவும், அன்பு செய்யவும் வேண்டிய தருணங்களே. தவக்காலத்தை மனமாற்றம், செபம், நமது உடைமைகளைப் பகிர்தலின் பயணமாக அனுபவிக்க விடுக்கப்பட்ட அழைப்பாக உணர்கையில், கிறிஸ்தவ சமூகமாகவும், தனிக் கிறிஸ்தவராகவும்,உயிருள்ளகிறிஸ்துவிடமிருந்து வரும் விசுவாசத்தைத் தூய ஆவியின் சுவாசத்தினால் தூண்டப்பட்ட நம்பிக்கையை தந்தையின் இரக்கமுள்ள இதயத்திலிருந்து பொங்கி வழியும் அன்பை நம்முள் உயிரூட்டமடையச் செய்ய முடியும். திருச்சிலுவை அடியிலும், திருச்சபையின் இதயத்திலும் எப்போதும் பிரமாணிக்கமுள்ளவரான மீட்பரின் தாய் மரியா அவரது அன்புப் பிரசன்னத்தால் பாதுகாத்து நம்மை வழிநடத்துவாராக! உயிர்த்த ஆண்டவரின் ஆசீர் உயிர்ப்பு விழா ஒளி நோக்கிய நமது பயணத்தில் உடன் பயணிப்பதாக!

சில புனிதர்கள் தமது சில தேவைகளை வல்லமையுடன் நிறைவேற்றும் வரம் பெற்றுள்ளனர். அவர்களால் எல்லாத் தேவைகளிலும் பரிந்துரைத்து வெற்றிகொள்ள இயலாது. ஆனால் புனித சூசையப்பர் நமது எல்லாத் தேவைகளிலும் பரிந்துரைத்து உதவக்கூடியவராகவும், எல்லா அவசியமான காரியங்கள். நமது எல்லா முயற்சிகளிலும் துணை நின்று உதவக்கூடிய வல்லமையுடையவராகவும் இருக்கிறார்.

- **புனித தோமஸ் அக்குவினாஸ்**



# காவலன் கலசம்

## சிறுகதை

# மறக்கப்பட்டவர்கள்

'என்னப்பா கடும் யோசன போல..' சமயலறை வேலைகள முடித்துவிட்டு வெளிவாசலில் அமர்ந்திருந்த ஜீவனின் அருகில் வந்து அமர்ந்தாள் ஜனனி. 'எல்லாம் அப்பாட யோசன தான் ஜனனி'. அவளுக்குப் பதில் சொல்லிவிட்டு மீண்டும் வானத்தை வெறித்துப் பார்த்த படி இருந்தான் ஜீவன். 'லீவு கிடைக்கேல்லயே?'

ஜனனி சற்று சோகமாகக் கேட்டாள். 'எங்க யப்பா.. இண்டைக்கும் ஓ.பி.டி யில் ஒரு கொள்ள சனம். காந்தரூபன் லீவு முடிச்சு வரமட்டும் நான் விலத்தேலா போல..' அவன் கம்பீரமான குரல் சோபையிழந்து ஒலித்தது. 'அப்பாவ பாக்கப் போகத்தானே வேணும்.. அவருக்கு வர வர நிலம சரியில்லாம போகுது.. அம்மா காலேல கதைக்கேக்க சொன்னா.. அக்காவயும் விளங் கேல்லயாம்..' அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவன் கண்கள் ஈரம் கண்டிருந்தது. 'அப்பா ஞாயிற்றுக் கிழமைக்கு யாழ்ப்பாணத்தில நிக்கிறமாதிரித் தன்னும் வெளிக்கிடுவம்.. எனக்கும் இந்த கிழமையோட லீவு விடுதுதானே..

கேளுங்கோ... இரண்டு கிழமைக்குத் தன்னும் அப்பாவோட இருந்தியளெண்டா கொஞ்சம் பெற்றரா பீல் பண்ணுவீங்கள்..' அவள் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு பேசினாள். 'கேட்டுக்கொண்டுதான் இருக் கிறன்.. ரூபன் இந்தக் கிழமைக்கு வாறெனெண்டுதான் சொன்னான்.. வந்துட்டா வெளிக்கிடலாம்..' அவனும் அவள் கைகளை இறுகப் பற்றியவாறு கூறினான். விண்மீன்களையெல்லாம் மேகங்கள் மூடிக்கொள்ள வானம் நரை கலந்த ஒரு இருட்டாகக் காட்சி தந்தது.

ஜீவன் ஒரு பொது வைத்திய நிபுணர். கண்டியில் ஒரு சிறு கிராமத்திலிருந்த ஆதார வைத்தியசாலை



யொன்றில் பணிபுரிந்து கொண்டிருந்தான். மனைவி ஜனனி ஒரு ஆங்கில ஆசிரியை. அவர்களுக்கு ஐந்து வயதில் ஒரு மகன், கோகுலன். அவர்கள் ஒரு அழகான இளம் குடும்பம். சுற்றியிருந்த நண்பர்களெல்லாம் பெயர், புகழ், அப்பாவின் கனவு, குடும்பப் பெருமை, பணம் என்று பல்லாயிரம் காரணங்களுக்காக மருத்துவத்துறை யத் தெரிவு செய்த போது, தன் கண்களின் முன் வீதி விபத்தில் இறந்துபோன ஒரு சிறுமியை மனதிலிருத்தி, மனித உயிர்களுக்கென்று அர்ப்பணிப்புடன் அந்தத் துறையைத் தெரிவு செய்தவன் ஜீவன்.

அவன் பல்கலைக்கழகம் முடித்து எம்.பி.பி.எஸ் பட்டத்துடன் நின்றபோது 'என்ட பெடி' என்று புழகாங்கி தப்பட்ட சதாசிவத்தார், கொழும்பில் அவன் பயின்ற போது பல்கலைக்கழகத்தின் இலக்கிய வட்டத்தினூ டாக நட்பாகிப் பின் காதலாகிப் போன ஜனனியை மனைவியாக்கிக் கொள்ள அனுமதி கேட்டபோது 'நீ எண்ட பிள்ளையே இல்ல.. வெளியபோடா' என்று விரட்டி விட்டார்.

'தம்பி... நாங்கள் வெள்ளாளர்.. அது கொழும் பில பிறந்து வளந்த பிள்ள... என்ன சாதி என்ன சன மெண்டு.. சிநேகிதமா பழகிற காரியமில்ல.. கலியா ணமேண்டு வேரக்க பலதும் பத்தும் பாக்க வேணும்.. பிறகு எங்கட சனத்துக்குள்ள மதிப்புக்கு என்னாகிறது...' என்று தாய் அவனிற்கு மூளைச்சலவை செய்ய முற்பட்ட போது 'பாரதியார் புத்தகமெல்லாம் வாங்கித்தந்து படிக்கச் சொன்னது அவர் தானே அம்மா? அவள் நல்லவள். என்ன நேசிக்கிறாள். இரண்டு பேரும் உழைக்கிறம். ஒரு குடும்பமா வாழ இதவிட வேற தேவைகள் என்ன இருக்கெண்டு எனக்கு விளங் கேல்ல.. அவர் போகச்சொன்னா நான் போறன். ஆனா என்ன நம்பினவளுக்கு துரோகம் செய்ய என்னால ஏலாது..' அவன் உறுதியாகக் கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

ஜனனியைத் திருமணம் செய்துகொண்டு கண்டி வைத்தியசாலைக்கு மாற்றலாகிச் சென்றதன் பின் சதாசிவத்தார் ஜீவனை அண்டப்பிடிக்கவில்லை. கோகுலன் பிறந்தபோது கூட அம்மா மட்டுமே வந்தார். அமெரிக்காவில் திருமணம் செய்து கொண்ட அவனின் தமக்கைக்கும் ஜனனிக்கும் நல்ல ராசி. அவர்களிரு வரும் அடிக்கடி பேசிக் கொள்வார்கள். அம்மா ஆரம்பத் தில் கோபமாக இருந்தாலும் கோகுலனின் பிறப்பு அவைர கைரத்துவிட்டது. சதாசிவத்தார் மட்டும் உடும்புப் பிடியை விட்ட பாடில்லை.

'டேய்.. நீ தன்னும் ஒருக்கால் வந்து பாத்தா என்ன? என்ர கொப்பர் தானே..' அம்மா தொலைபேசி உரையாடல்களில் சில சமயம் கூறுவார். 'அவரின்ர வீடம்மா.. போகச்சொன்னவர். அவர் வரச் சொல்லாமல் வாசல மிதிக்க மாட்டன்..' அவன் அமைதியாகப் பதில ளிப்பான். இப்படியே ஏழு வருடங்கள் உருண்டுபோனது.

சென்ற வருட இறுதியில் தான் சதாசிவத்தாரின் உடல்நிலை பற்றிய பேரிடி அவர்களுக்குக் கிட்டியது. மழைக்குளிர் நிறைந்த மார்கழியில் ஒருநாள் அம்மா விடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. 'தம்பி அப்பா கார எங்கயோ விட்டுட்டு வந்து நிக்கிறாரடா.. எங்க விட்ட எண்டு சொல்லத் தெரியுதில்லஅவருக்கு.

என்னெண்டு வந்தனீங்களெண்ட நடந்து எண்டுறார். காரெங்க எண்டு கேக்க என்னட்ட எங்க கார் கிடக்கு எண்டு கத்திப்போட்டு குளிக்கப் போட்டார்.. என்ன செய்ய ஒண்டும் விளங்கேல்ல..

அப்பாவுக்கு ஏதும்..' அம்மாவின் குரல் நடுங்கி யது. 'அம்மா பயப்பிடாதேங்க.. சரவணனிடட்ச் சொல்லி கார கண்டு பிடிக்கச் சொல்லுங்கோ.. மிச்சத்த நாளைக்கு கதைப்பம்..' என்று விட்டு தொலைபேசியை ஜனனி கைக்கு மாற்றிவிட்டு அவன் கைப்பேசியும் கையுமாக வாசலுக்குச் சென்றுவிட்டான்.

ஜனனி அம்மாவுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டி ருந்த போது அவன் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பணிபுரிந்து கொண்டிருந்த தன் நண்பன் ஹரிகரனுடன் தொடர்புகொண்டு அப்பாவின் திடீர்மாற் றம் பற்றிப் பேசினான். 'மச்சான் அல்சமைர்ஸ் போல கிடக்கு.. சும்மா மறதில கார விட்டுட்டு வாற பிரச்சின இல்லையடா.. கார் வச்சிருந்ததையே மறந்துபோனா ரெண்டத்தான் ஒரே யோசனையாக் கிடக்கு.. ஒருக்கா நாளைக்கு போய் பாக்கிறியே.ட்யூட்டி முடி யத்தனும்...' ஜீவன் இழுத்தான். ஒரு வைத்தியராக அவன் கேட்ட உதவி எத்தனை எரிச்சலுக்கு ரியதென்று அவன் உணர்ந் திருந்தான். 'இதுக்கேனடாப்பா இழுக்கிறாய்.. போய் பாரெண்டா பாக்கப் போறன். என்ர அப்பாக்கெண்டால் போக மாட்டேனா!' ஹரிகரன் சொன்னதைக்கேட்டு ஜீவன் மகிழ்ந்தாலும் பெற்றதந்தைக்கு என்ன ஆனதென்று பக்கத்திலிருந்து பார்த்துக் கொள்ளவில்லையே என்ற உறுத்தல் உள்ளூர இருந்தது.

'தாங்ஸ்டா மச்சான்.. பாத்துட்டு சொல்லு.. வில் பீ வேயிட்டிங் ஃ பொர் யுவர் கோல்' என்று கூறிவிட்டு அழைப்பைத் துண்டித்தான். அவன் பயந்து போலவே சதாசிவத்தார் அல்சமைர் ஆகிவிட்டாரென்று அறிக்கை கள் வந்து சேர்ந்த போது இடிந்துபோனான் ஜீவன். இப்போது தன்தந்தையின் இந்த மறதி வியாதிக்கு தன் னால் ஏற்பட்ட மன உளைச்சல்தான் காரணமென்ற குற்ற உணர்வு அவனைக் கொல்லத் தொடங்கியது. பெற்ற தகப்பனின் நிலையை அறிந்து, அதற்குத் தானும் ஒரு காரணம் என்று உள்ளம் குமையத்தொடங்கிய திலிருந்து அப்பாவைக் காணவென்று இரண்டுமுறை யாழ்ப்பாணம் சென்றபோதும் சதாசிவத்தார் வாசல் படிக்குக் கூட வராமல் 'அன்னம் அவனப் போகச்சொல்லு..' என்று நடுக்கூடத்தில் நின்று கத்திக் கலைத்துவிட்டார்.

அவன் பணியிலிருந்த வைத்தியசாலையில் இரு பொது வைத்திய நிபுணர்கள் மட்டுமே பணியிலி ருந்ததால் அவனால் அடிக்கடி விடுமுறை கேட்கவும் முடியவில்லை. மனதின் வேதனை அதிகமாகி அழுத் தும் போதெல்லாம் வாசலில் வந்து அமர்ந்துவிடுவான். ஜனனி அவன் கைகளை இறுகப் பற்றியபடி அவன் தோளில் சாய்ந்து கொள்வாள்.

'அக்காவயே விளங்கேல்ல எண்டால்.. என்ன...' அவன் ஏங்கிய விழிகளோடு அவளைப் பார்த்தான். 'அப்பாக்கு உங்கள விளங்கும்' அவள் உறுதியோடு சொன்னாள். 'என்னையை உள்ளுக்கு விடமாட் டேணெண்டு கத்தினவர்... உம்மையும் கோகுலனையும் கண்டு கோவத்தில என்னவும்...' அவன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

'அப்பா இங்க பாருங்கோ...' அவள் மென்மை யாகப் பேசினாள். 'நீங்க போங்கோ முதல்.. நாங்கள் அக்காவீட்ட நிக்கிறம்.. அவர் உங்களோட பிரச்சினப் படமாட்டார்..' அவள் குரலில் வேதனை கரைந்திருந்தது. தன் கணவனின் துன்பத்திற்கு ஏதோ ஒரு வகையில் தானும் காரணமென்ற உறுத்தல் அவளுக்கு.

'இந்த முறையும் வெளில போகச்சொல் லிட்டாரெண்டா?' ஒரு கனத்த அமைதி அவர்களிருவரை யும் சூழ்ந்தது. ஜனனிக்கு என்ன சொல்ல வேண்டு மென்று பிடிபடவில்லை. அவள் அவன் கைகளை கட்டிக் கொண்டு சாய்ந்து கொண்டாள். இப்போது அவள் கண் களும் பனிக்கத் தொடங்கின. 'இந்தமுற அவர் என்ன சொன்னாலும் நான் பாக்கிற பாக்கிற தான்' அவன் அந்தச் செவிடாக்கும் மௌனத்தைக் கைலத்துக் கொண்டு சொன்னான். 'செருப்பால அடிச்சாலும் அவரக் கண்டு கதைக்காம வாறயில்ல..' மீண்டும் உறுதியாகச் சொன்னான்.

'அவர் கதைப்பார். நீங்கள் இருந்து பாருங் கவன்..' அவள் அவன் நம்பிக்கைக்கு கொஞ்சம் உர மூட்டினாள். 'படுப்போமா? நேரமாச்சு.. வெள்ளன போக வேணும்..' அப்படியே அவர்கள் உறங்கிப் போனார்கள்.

* * *

ரயில் நிலையத்திலிருந்து ஜனனியும் கோகுல னும் அவனின் தமக்கை வீட்டிற்குச் செல்ல அவன் சரவணனோடு மோட்டார்சைக்கிளில் தொற்றிக் கொண் டான். 'அப்பா கதச்ச பிறகு கோல் பண்ணுங்கோ..' அவள் மீண்டும் ஒரு முறை அவனுக்கு நினைவுபடுத்திவிட்டு அவன் அக்கா வீட்டுக் காரில் ஏறிக் கொண்டாள். 'சரவணா அப்பா என்ன மாதிரியடா இருக்கிறார்?' அவன் மெல்லக் கேட்டான்.

'இருக்கிறார் அண்ணே... இப்ப வெளிய வெளிக் கிடுறல்ல. க்ளினிக் நாளில அம்மாதான் கூட்டிட்டு போறவா.. மற்றபடி வீட்டில தான்..' அவன் பேசிக் கொண்டே சிக்னலில் மோட்டார் சைக்கிள நிறுத்தி னான். 'அண்ணே, உடம்புக்கு ஒண்டுமில்லேயே.. சுகே தேகியா நல்லா இருக்கிறார்.. வடிவா சாப்பிடுறார்.. முன்னெமல்லாம் சாப்பிட்ட நித்திர கொண்டதெல்லாம் மறந்துபோவார்.. ஆனா போன கிழம அக்கா வர.. அவவ தெரியேல்ல..' அவன் குரல் கம்மியது. 'அக்கா உடஞ்சு போனா.. வந்து ஆசையா அப்பா எண்ட.. பிள்ள யாரு? ஆரபிண்ட ப்ரெண்டே.. அவள் வீட்டில இல்ல மகள் எண்டு சொல்லிப்போட்டு அறேக்க போய் கதவ சாத்திற்றார்.. அம்மாவ மட்டும் தான் விளங்குது...' சொல்லிக் கொண்டே எஞ்சினை இயக்கினான் சரவ ணன். பச்சை விளக்கு எரிந்தது. 'என்னோட கதைப்பா ரெண்டு நினைக்கிறியே?' ஜீவன் பெருமூச்சோடு கேட்டான். 'எல்லாம் கதைப்பாரண்ணே.. நாளைக்கு அண்ணியோடயும் கதைப்பார். யோசிக்காதீங்க.. இப்ப ஜீவனங்க எண்டும் கேக்கிறார்..' அவன் ஆறுதலாகச் சொன்னான். 'அக்காவ நினைப்பிருந்தா ஏன் விளங் கேல...' அவன் பதட்டத்துடன் கேட்டான். 'டொக்டர் ஹரி சொன்னார், அவருக்கு ரீசண்ட் பாஸ்ட் தான் மறந்துபோயிருக்கு எண்டு.. உங்கள சின்னப் பிள்ளை யளா நினைவிருக்கு... அம்மா அல்பத்த காட்டி கேட்டா சொல்லுறார்..' அவன் சற்று விளக்கினான். சதாசிவத்தார் உரையாடுவார் என்ற ஒற்றை நம்பிக்கையுடன் தன் வீட்டுப் படலையின் முன் இறங்கினான். 'அண்ணே பைக்க விட்டுட்டு வாறன்' என்று கொண்டே சரவணன் மோட்டார் சைக்கிளோடு வீட்டின் பின்சென்றுவிட்டான். வீட்டுப் படலையைத் தாண்டியபோது 'அன்னம் அவனப் போகச்சொல்லு' என்று அப்பாவின் அசரீரி ஒலித்தது. ஒரு பெருமூச்செறிந்துவிட்டு வீட்டுவாசலைப் பார்த்து நடந்தான். அப்பா விறாந்தையில் ஒரு உதயன் பேப்பருக்குள் புதைந்துபோயிருந்தார். அவரில் எந்த மாற்றமுமில்லை. அதே வாகான உடல், வழக்கம் போல அரைக்கை பெனியனோடு ஒரு சாரமும் கட்டிக் கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார். ஜீவன் செருப்பைக் கழட்டும் சத்தம் கேட்டு பேப்பருக்குள் இருந்து தலைய நீட்டிப் பார்த்தார். ஜீவனுக்கு உள் ளுக்குள் அடித்துக் கொண்டது. எந்த நிமிடம் வெடிக்கு மென்று தெரியாத...

(தொடர்ச்சி 11ம் பக்.)

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**முதல் முயற்சி**

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. அருட்பணி நீட் ஷெல்டன் அவர்கள் 1985இல் மேல் படிப்புக்காக பெல்ஜியம் சென்றபோது அச்சந்தர்ப்பத்தை அடித்தளக் கிறிஸ்தவ குழுமங்கள் பற்றிய தனது அறிவையும் அனுபவத்தையும் ஆழப்படுத்துவதற்குப் பயன்படுத்திக் கொண்டார். பிறேசில் நாட்டில் மூன்று மாதங்கள் தங்கியிருந்து இவர் தமது அனுபவத்தை ஆழப்படுத்திக் கொண்டார். 1987 இல் உயர்கல்வியை முடித்து நாடு திரும்பியபோது இவர் மீண்டும் அடித்தளக் கிறிஸ்தவ குழுமங்களுக்குத் தொடர்பாளராக நியமிக்கப்பட்டார். இச்சந்தர்ப்பத்தில் கொழும்பு மறைமாவட்டத்தில் இக்குழுமங்கள் திருச்சபை வாழ்வின் ஒரு சாதாரண விடயமாக மாறி இருந்ததாக அவர் குறிப்பிடுகின்றார். சில குருக்கள் மிகுந்த ஆர்வத்தோடு இக்குழும உருவாக்கத்தில் ஈடுபட்டிருந்தனர் இக்காலங்களில் கொழும்பு மறை மாவட்டத்தின் முப்பது பங்குகளில் இக் குழுமங்கள் இயங்கி வந்தன.

# இலங்கையிலும் குறிப்பாக யாழ்ப்பாண மறை மாவட்டத்திலும் அன்பியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

## ஒரு வரலாற்று நோக்கு



1987இல் புதிதாக உருவாக்கப்பட்ட குருநாகல் மாவட்டத்தின் ஆயர் றேமன்ட் பீரிஸ் அவர்கள் தான் புதிதாகப் பொறுப்பேற்ற அந்த மறைமாவட்டத்தில் அடித்தள கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்க உதவினார். அவரது கருத்துப்படி குருநாகல் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. லயனல் பெர்னான்டோ அவர்கள் இவ்விடயத்தில் விசேட ஆர்வம் காட்டியுள்ளார்.

ஆயினும் 1990களின் ஆரம்பத்திலிருந்து கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் அடித்தளக் கிறிஸ்தவ குழுமங்கள் வீழ்ச்சியைக் காண ஆரம்பித்தன. படிப்படியாக அவை மறையத் தொடங்கின. இப்பின்னடைவுக்கு இதன் உருவாக்கத்தில் ஆர்வம் காட்டிய அருட்பணி நீட் ஷெல்டன் பின்வரும் காரணங்களை முன்வைக்கிறார்.

குழுமவாழ்வின் பெறுமதியையும் முக்கியத்துவத்தையும் திருச்சபைத் தலைவர்கள் அறியவில்லை. அதனால் அவர்களது அக்கறை குன்றியிருந்தது. பலர் அமைப்புகளைக் கட்டியெழுப்பு வதிலேயே ஆர்வம் கொண்டிருந்தனர்.

அடித்தளக் கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்க வேண்டுமென்பது ஒரு சிலரின் ஈடுபாடாகவே கருதப்பட்டது. மறை மாவட்ட கொள்கையாக உருவாக்கப்பட்டு அனைவருடைய கடமையும் ஆக்கப்படவில்லை.

ஒரு சில குருக்களே ஆர்வமாக இருந்த நிலையில் அவர்களுள் பலரும் இதனை வெறும் நிர்வாக அலகாகக் கருதி ஆலயத்திற்குத் தேவையான நிதியை சேகரிக்கும் அமைப்பாகச் செயற்படுத்தினர்.

அவற்றை உருவாக்கும் குருக்கள் மாற்றப்படும் போது தொடர்ச்சியற்ற நிலையில் இக்குழுமங்கள் மறைந்து போயின.

பொதுநிலையினரின் ஈடுபாடு அதிகரிக்க வேண்டும். அவர்கள் உருவாக்கப்படவேண்டும். அவர்களது தலைமைத்துவம் திருச் சபைக்கு அவசியம் போன்ற விடயங்களில் உண்மையான ஆர்வமும் நம்பிக்கையும் காணப்படவில்லை.

மேற்சொல்லப்பட்டது போன்ற காரணங்களால் அடித்தளக் கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்கி அதன் மூலம் திருச்சபையின் குழுமவாழ்வை மேம்படுத்தி இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்வைத்த இலட்சிய இறைமக்கள் சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் முயற்சி படிப்படியாகப் பின்னடைவு கண்டது.

**இரண்டாவது முயற்சி**

இலங்கையில் சிறிய கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்குவதன் மூலம் தொடக்கத்திருச்சபை வாழ்ந்து காட்டிய இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்மொழியும் இறைமக்கள் சமுதாயம் என்கின்ற இலட்சிய குழும வாழ்வை நடைமுறைக்குக் கொண்டுவரும் இரண்டாவது முயற்சி 1995 இல் ஆரம்பமானது. இது 1990இல் ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று ஆசிய ஆயர் பேரவைகளின் மனித முன்னேற்ற மற்றும் பொதுநிலைப் பணியகங்கள் இணைந்து 1993இல் அறிமுகம் செய்த ஆசியாவுக்கான ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறையின்படி அறிமுகமானது.

இதன் முதலாவது பயிற்சிக் கருத்தமர்வு 1995ஆம் கண்டியில் உள்ள லேவல்ல தியான இல்லத்தில் நடைபெற்றது. ஆபிரிக்காவின் லும்கோ நிறுவனத்தின் இணை நிறுவுனரான காலம் சென்ற ஆயர் ஒஸ்வேல்ட் கிர்மர் (அப்போது அருட்பணியாளர்) தலைமையில் இப்பயிற்சி நடைபெற்றது. அப்போது ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பின் பொதுநிலைப்பணியகத்தின் பொறுப்பாளராக இருந்த செல்வி கோறா மத்தேயு, இந்தியாவைச் சேர்ந்த அருடபணி. தோமஸ் விஜேய், பிலிப்பைன்ஸை சேர்ந்த செல்வி. ஸ்ரெல்லா படில்லா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் என ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் ஐந்து பேர் கலந்துகொண்டனர்.




ஆசியாவுக்கான ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறையின் கையேடுகள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு பங்குபற்றுநர்கள் அவற்றைப் பயன்படுத்தி எவ்வாறு சிறிய கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்குவது என்றும் பயிற்றப்பட்டனர். பயிற்சியின் முடிவில் நீண்டதொரு கலந்துரையாடலின் நிறைவாக இலங்கை முழுவதற்கும் அனைத்து மறைமாவட்டங்களிலும் இது ஒரு மேய்ப்புப் பணி முன்னுரிமையாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் கண்டி மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி மில்றோய் தேசிய இணைப்பாளராக நியமிக்கப்பட்டார். கிளரீசியன் சபையைச் சேர்ந்த அருட்பணி றொகான் டொமினிக் அவர்கள் தமிழ்பகுதிக்கான இணைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

**அருட்தந்தை. ம.வி.இ. ரவிச்சந்திரன்**

பயிற்சிக் கையேடுகள் மிக விரைவாக சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டன. அனைத்து மறைமாவட்டங்களிலும் மறைமாவட்ட குழுக்கள் உருவாக்கப்பட்டன. முதலாவது பயிற்சி அமர்வில் கலந்து கொண்டவர்களே பெரும்பாலும் மறைமாவட்ட இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டார். சிறிய கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்கும் முயற்சி மிக விரைவாக மிகுந்தஉற்சாகத்தோடு அனைத்து மறைமாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைக்கான ஆயர் மன்றமும் மேற்படி நிலைப்பாட்டை முழுமையாக ஏற்று வெவ்வேறு காலங்களில் மூன்று மேய்ப்புப்பணி மடல்களை வரைந்தனர். தமது முதலாவது மடலை 1995 டிசெம்பர் மாதத்தில் வரைந்த ஆயர் மன்றம் பாண்டுங் அறிக்கையை வரவேற்ற பின்பு ஆசியாவுக்கான இந்த மேய்ப்புப்பணி அணுகுமுறையை 2000 யூபிலி ஆண்டுக்கு இலங்கைத் திருச்சபையை ஆயத்தம் செய்யும் தேசிய மேய்ப்புப்பணி செயற்திட்டமாக அங்கீகரித்தது. மேலும் அதே ஆண்டிலே நடைபெற்ற இலங்கைக்கான தேசிய மாநாட்டின் மையப் பொருளான 'புதுப்பிக்கப்பட்டு பகிரும் திருச்சபையை நோக்கிய பயணம்' என்னும் இலக்கை அடையும் வழியாக இறைவார்த்தையினால் உயிரூட்டம் பெறும் சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் திகழ முடியும் என்றும் குறிப்பிடுகிறது.

(தொடரும்...)

## அன்பியம் என்றால் என்ன?

இறை அன்பில் நிலைத்திருந்து சான்றுபகர்தலே 'அன்பியம்' ஆகும். அன்பியத்தின் அடித்தளம் இயேசுக்கிறிஸ்துவே. இயேசு இவ்வுலகை விட்டுப் பிரியும் முன்னர் தந்தையிடம் வேண்டுதல் செய்கின்றார். அதில் "எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக" (யோ: 17:21) என்ற எதிர்பார்ப்பை எடுத்துரைக்கின்றார். இயேசு தானும் தந்தையும் அன்பில் இணைந்திருப்பதைப் போல அனைவரும் அன்பில் நிலைத்து நிற்க வேண்டும் என வேண்டுதல் செய்வதை யோவான் நற்செய்தியாளர் தருகின்றார்.

இயேசுவின் அன்பை அறிந்து, அனுபவித்து வாழ்வாக்கி அறிவிக்கின்ற வாழ்க்கையே அன்பிய வாழ்க்கை. மனித வாழ்வின் எல்லா நிலைகளையும் இறைவார்த்தையின் ஒளியில் உணர்ந்து வாழும் நிலையே அன்பிய வாழ்வாகும். மூவொரு கடவுளிடையே உள்ள ஒன்றிப்பையும் செயற்பாட்டையும் வாழ்வாக்க முயற்சிக்கும் இடமாகவும், தூய ஆவியின் துணையால் அதற்கு சாட்சியம் பகரும் குழுமமாகவும் அன்பியங்கள் விளங்குகின்றன. இயேசுவின் இறையாட்சியின் விழுமியங்களை வாழத் தூண்டும் கருவியாகவும், பொது நிலையினருக்கான பங்கேற்புத் தளமாகவும், மனித காயங்களை ஆற்றிடும் அருமருந்தாகவும் அன்பியங்கள் திகழுகின்றன. எனவே அன்பியம் என்பதனை 'அன்பினால் இயக்கப்படும் ஓர் இயக்கம்' என வரையறை செய்து கொள்ளலாம்.

### அன்பியத்தின் வேறு பெயர்கள்

உலகம் முழுவதும் பரந்து விரிந்துள்ள திருச்சபையின் மத்தியிலே இறையன்பையும், இறைவார்த்தையையும் மையமாகக் கொண்டு இயங்கும் குழுக்கள் பலவுள்ளன. இவைகள் பல்வேறு பெயர்களிலே அழைக்கப்படுகின்றன.

- சிறு கிறிஸ்தவ குழுமங்கள் (Small Christian Communities)
- அடித்தளக் கிறிஸ்தவ குழுமங்கள் (Basic Christian Communities)
- அடித்தளத் திருஅவைக் குழுமங்கள் (Basic Church Communities)

ஆசிய அளவில் அன்பியத்தை 'அசிப்பா' – 'ASIPA' – Asian Integral Pastoral Approach என்றும், இந்திய அளவில் 'தீபா' - DIIPA –Developing Indian Integral Pastoral Approach என்றும் அழைக்கப்படுகின்றது. 1978 இல் தமிழ் நாட்டின் கோட்டார் மறைமாவட்டத்திலே பங்குகளை அன்பியங்களாகப் பிரித்த அருட்பணி. எட்வின் அடிகளார் அடித்தளக் கிறிஸ்வதக் குழுமங்களை ஆரம்பிக்கும் போது ஆண்டவர் இயேசு நமக்குக் காட்டிய அன்பை, அன்பின் குழுக்களாக இணைந்து நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கில் 'அன்பியம்' என்று பெயர் சூட்டினார் என அறிகின்றோம். அதுவே நாளடைவில் அன்பியம் என்று நிலையான பெயரைப் பெற்று விளங்குகின்றது.

**அருட்தந்தை. அ. மில்பர் வாஸ் CMF**

## திருவிவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி -01

### விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | றை | வா | க் | கி 2 | ன | ர் | ம 3 |
| ர | | 4 இ | 5 வி | ண் | மீ 6 | ன் | ன |
| க் | ம 7 | ர | | ண | ட் | | வு |
| க 8 | ண | க் | கு | ம் | பு | ப 9 | று |
| த் | வி | 10 க | ட | ல் | | ரி | தி |
| தை | ல | ம் | | 11 உ | ற | வு | யு |
| யே | க் | 12 தொ | ண் | ட | ரா | ய் | ட |
| | கு | | வ | ல் | ல | மை | ன் |

**விடைகளை அனுப்பி பாராட்டுக்குரியோர் விபரம்**

| | |
|---|---|
| அ.தமிழரசி<br>புனித அந்தோனியார் ஆலயம்<br>பூநகரி,<br>பள்ளிக்குடா. | றொ.அஸ்மிதா<br>புனித அன்னாள் ஆலயம்<br>வலைப்பாடு, |
| து.மேரிசர்மிளா<br>குழந்தையேசு ஆலயம்<br>154ம் கட்டை, இந்துபுரம்,<br>முறிகண்டி, கிளிநொச்சி | G.A.ராஜசேகன்<br>புனித அன்னாள் ஆலயம்<br>கூழாவடி கிழக்கு,<br>மானிப்பாய் |
| G.M.ஞானசிங்கம்<br>யாழ். பேராலயம்<br>53/3, மவுண்கார்மல்<br>வீதி, யாழ்ப்பாணம். | அ.மரிய சிலோஜனா<br>புனித பேதுருவானவர் ஆலயம்<br>4ம் வட்டாரம்,<br>மண்டைதீவு, |

# காவலன் கலசம்

## கடமையின் சிகரமாய் அருட்பணி G. E. மேரி யோசப்

அருட்பணி. இ.ஸ்ரலின்



"அமரரான அருட்பணி மேரி யோசப் அடிகளாரின் வாழ்வு ஒரு எடுத்துக்காட்டான, நல்லுதாராணமான வாழ்வாக விளங்கியது என்பதைப் பலரும் ஒத்துக்கொள்வர். இவருடனான உறவு எனது சிறிய குருமட வாழ்வு தொடங்கி அவரது வாழ்வின் இறுதிவரை தொடர்ந்து வந்துள்ளது."
-அருட்பணி இராசேந்திரம் ஸ்ரலின்

**1. ஆன்மீக வாழ்வு:** இவர் குருக்களுக்கான செபங்களைச் சொல்வதில் தவறமாட்டார். நற்கருணை ஆண்டவர் முன் தனித்திருந்து செபிப்பதிலும் இவர் நேரம் கழிப்பதைக் கண்டுள்ளேன். இவருடைய ஆன்மீகத்தை அவர் தன் துன்பங்களை நல்ல மனத்தோடு ஏற்று வாழ்ந்ததிலும் கடமைகளைப் பொறுப்புணர்வோடு மேற்கொண்டதிலும் கண்டுள்ளேன்.

**2. கடமை உணர்வு:** கடமை, பொறுப்புணர்வு போன்றவற்றிற்கு இவரை ஒரு நல்ல உதாரணமாகக் கொள்ள முடியும். பங்குப் பணியாக இருந்தாலும் சரி, குருமட அதிபர் மற்றும் விரிவுரையாளர் பணியாக இருந்தாலும் சரி, பாதுகாவலன் ஆசிரியராக இருந்தாலும் சரி கடமை தவற மாட்டார். அத்தோடு நேரம் பேணுவதிலும் தவற மாட்டார். கொடுக்கும் பணியை ஆண்டவர் தந்த பணியாக ஏற்று முழுமன அர்ப்பணத்தோடு ஆற்றி வந்தார். பங்குகளில் பதிவேடுகளை ஒழுங்காகப் பேணி வந்ததோடு அவற்றை எவ்வாறு எழுதுவது பேணிப்பராமரிப்பது என்பதையும் குருமட மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பார். தன் வயோதிபப் பருவத்திலும் தன்னால் இயன்றவரை குருமட மாணவர்களின் உருவாக்திற்குப் பங்களிப்புச் செய்து கொண்டேயிருந்தார். பெரிய குருமட நூலகப் பொறுப்பாளர் கடமையையும் அர்ப்பணிப்புடனேயே செய்து முடித்தார்.

**3. திட்டமிட்டுச் செயற்படுத்தல்:** எந்தப் பணியையும், விரிவுரையையும் திட்டமிட்டுச் சரியான முறையில் மேற்கொள்வது இவரது ஆளுமையில் மிளிர்ந்த இன்னொரு நற்பழக்கமாகும்.

**4. எளிமையான வாழ்வு:** எளிமை, சிக்கனம் என்பன இவரோடு ஒட்டிப்பிறந்த பண்புகளாகக் காணமுடியும். ஆடம்பரப் பொருள் என்று சொல்லக்கூடிய எதனையும் இவர் வைத்திருந்ததை நான் கண்டதில்லை. ஆடம்பரம் என்பது இவரது சிந்தனையில் துளியும் கிடையாது. தன்னைப் பற்றித் தம்பட்டம் அடிப்பதோ தற்பெருமை கொள்வதோ இவரில் எவரும் காணமுடியாதவை. இவர் புகழையோ பிரபல்யத்தையோ ஒருபோதும் நாடியதும் கிடையாது. 'நானும் எனக்கு இறைவன் தந்த பணிகளும்' என்ற ஒரு உணர்வுடனேயே இவர் செயற்பட்டதைக் காணமுடியும். இவர் நாவாந்துறைப் பங்குத் தந்தையாகப் பணியாற்றும்போது அங்கு ஒரேயொரு கட்டில் மட்டுமே இருந்தது. அருட்தந்தை மத்தியஸ் அடிகள் அக்காலப் பகுதியில் குருமட மாணவனாக றோமா புரியிலிருந்து வந்திருந்தபோது இவரோடு பணியாற்ற அனுப்பப்பட்டார். இவருக்குக் கட்டிலின்றி உறங்குவது கடினமாக இருக்குமென உணர்ந்து அவரைத் தன் கட்டிலில் உறங்கவிட்டுத் தான் நிலத்தில் பாய்போட்டுப் படுத்துக்கொண்டார். அவரது மறுப்பை ஏற்க மறுத்து, கட்டிலிலேயே படும் என்று கேட்டுக் கொண்டார். இவர் பற்றிப் பேசும்போது 'இவர் ஒரு உயர்ந்த மனிதன்' என்ற வார்த்தைகளே அருட்தந்தை மத்தியசின் உதட்டில் உதிர்ந்தது.

**5. ஏழைகள்மீது இரக்கம்:** தனக்குக் கிடைக்கும் பணத்தில் ஒரு பகுதியை ஏழைகளுக்கென்றே செலவழிப்பார். வேலை செய்வோருக்கு உரிய சம்பளம் கொடுப்பதில் நீதியைக் கடைப்பிடிப்பார். வலது கை செய்வதை இடது கை அறியாதிருக்க வேண்டும் என்ற இயேசுவின் போதனையை வாழ்வில் முற்றாகக் கடைப்பிடித்தவர்.

**6. சுயகட்டுப்பாடு:** உரிய வேலையை உரிய நேரத்தில் செய்து முடிப்பதில் கருத்தாயிருப்பார். நித்திரைக்குச் செல்லுதல், காலையில் எழுந்திருத்தல், செபம், போன்ற ஒவ்வொன்றையும் உரிய நேரத்தில் செய்து முடிப்பார்.

(தொடர்ச்சி 09 ஆம் பக்.)



# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

*(கனி, யாழ்ப்பாணம்)*

**கே: கண்ட கண்ட இடங்களில் குப்பைகளைத் தூக்கிவீசும் நண்பர்கள் தாங்கள் செய்யும் தவறினை உணர்ந்து செயற்படுகின்ற மாதிரி ஏதாவது சொல்வீர்களா?**

**ப:** தமிழ்நாட்டில் விருதுநகர் ஆணையாளர் ஒரு முக்கிய அறிவிப்பைத் தன்னுடைய நகராட்சிப் பகுதியில் சுவரொட்டிகள் மூலம் மக்களுக்கு அறிவித்திருக்கின்றார். அது வருமாறு: "ஏன்யா பணத்தை மட்டும் கரெக்டா பேங்கில் போடுறீங்களே! அது மாதிரி குப்பையையும் குப்பை வண்டியில் போட்டால் என்ன?" கனி, நம்முடைய ஒவ்வொருவரின் வீட்டு வாசலிலும் ஒட்டிவைக்க வேண்டிய ஓர் அருமையான வாசகம்!

*(சுதா, யாழ்ப்பாணம்)*

**கே: பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை சென்று என்ன நடந்திருக்கிறது?**

**ப:** சொல்ல வேண்டியதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதாவது, 'தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும். தமிழ் இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற இன அழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டும். இதன்பால் தொடர்ச்சியாக ஜனநாயக வழியில் போராடுவோம் என உறுதி எடுத்துக் கொள்கிறோம்.' என தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள். தெளிவு கிடைத்திருக்கின்றதா சுதா?

*(நதி, மன்னார்)*

**கே: பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நடைபெற்ற போராட்டம் நடைபவனியா அல்லது வாகனப் பேரணியா?**

**ப:** நதி, அவர்கள் நடைபவனியாக வைத்தாலென்ன வாகனப் பேரணியாக வைத்தாலென்ன? நீங்கள் போயிருந்தால் எப்படி வைத்தார்கள் எனத் தெரிந்திருக்கும்! அதன் அர்த்தம், நீங்கள் போகவில்லைப் போலத்தான் தெரிகின்றது! சரியா நதி?

*(ஜெயா பாலாஜி, முருங்கன்)*

**கே: தமிழரின் ஒன்றுபடாமை மூவேந்தர் காலத்திலிருந்து வருகின்றது. அவ்வப்போது ஒன்றுபடுவது போலத் தோன்றினாலும் அவ் ஒன்றுபடுதலுக்கு ஏதாவது ஒன்று ஆகிவிடுகிறதே? நம் வரலாறு மாறாதா?**

**ப:** மாறும்!... ஆனால், வரலாறு சுற்றிக் கொண்டு வருகின்றது (history repeats itself) என்றொரு கூற்றினைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் சொல்லுகின்றார்கள். அது தான் ஒற்றுமைப்படாத வரலாறு நம்மைச் சுற்றிச்சுற்றி வருகிறதோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது ஜீ!

*(தனு, மன்னார்)*

**கே: திருமணம் செய்துகொள்கின்ற ஆணும் பெண்ணும் ஒருவர் ஒருவரின் பிழைகளை மன்னித்து வாழ வேண்டும். இப்பண்பு இப்போது குறைந்துகொண்டு போவதால் தான் பல பிரச்சினைகளை இன்றைய குடும்பங்கள் சந்திக்கின்றன. இது பற்றிய ஆழ்ந்த புரிதலை இக்காலத்தில் திருமணம் செய்யப் போகின்றவர்கள் கொண்டிருக்கின்றார்களா?**

**ப:** சொல்லத் தெரியல்ல தனு! ஆனால், இவள் என் சதையின் சதையுமாய் இருக்கிறாள் என்றும் இவன் என் சதையின் சதையுமாய் இருக்கிறான் எனவும் சிந்தித்தால் கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்வது இனிதான அனுபவமாகிவிடும். ஒருதடவை, மகன், தான் திருமணம் செய்யப்போவதாகத் தந்தையிடம் கூறுகின்றான். இந் நேரத்தில் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் நடந்த உரையாடலைக் கவனியுங்கள். இதன்பின் திருமணம் செய்து கொள்வதற்கான முடிவை இளையவர்கள் எடுத்துக்கொள்ளலாம்.

**மகன்:** அப்பா, நான் திருமணம் செய்யப்போகிறேன்.

**தந்தை:** முதலில், 'என்னை மன்னித்து விடுங்கள்' என்று சொல்.

**மகன்:** எதற்காக அப்பா!

**தந்தை:** 'மன்னித்துவிடுங்கள்' என்று சொல்.

**மகன்:** எதற்காக அப்பா? நான் என்ன தவறுசெய்தேன்?

**தந்தை:** முதலில் 'மன்னித்துவிடுங்கள்' என்று சொல்.

**மகன்:** என்ன தவறுசெய்தேன் என்று சொல்லுங்கள் அப்பா!

**தந்தை:** முதலில் 'மன்னித்துவிடுங்கள்' என்று சொல்.

**மகன்:** ஏன் அப்பா?

**தந்தை:** முதலில் 'மன்னித்துவிடுங்கள்' என்று சொல்.

**மகன்:** தயவுசெய்து காரணத்தைச் சொல்லுங்கள் அப்பா.

**தந்தை:** முதலில் 'மன்னித்துவிடுங்கள்" என்று சொல்.

**மகன்:** சரி, 'என்னை மன்னித்து விடுங்கள்' அப்பா!

**தந்தை:** இப்போது நீ திருமணம் செய்ய உனக்குத் தகுதியிருக்கிறது. எவ்வித காரணமும் இல்லாமல் 'என்னை மன்னித்துவிடு' என உன் மனைவிக்குச் சொல்ல ஆயத்தமானால் நீ திருமணம் செய்யத்தகுதி உடையவன் என்றாராம். தனு, குடும்ப வாழ்வில் வெற்றியின் இன்னுமொரு இரகசியம் விளங்குகின்றதா?

*(கமல், யாழ்ப்பாணம்)*

**கே: அண்மையில் தாங்கள் விரும்பிப் படித்த இரண்டு நூல்களைத் தர முடியுமா?**

**ப:** குறிஞ்சாளினி, பங்கயத்தேவன் ஆகியவை. இவ்விரு நூல்களும் அருட்பணி ரீ. எஸ். யோசுவா அடிகளாரால் எழுதப்பட்டவை. மறக்கப்பட்ட நம் மண்ணின் பொக்கிஷங்கள் பற்றிப் பேசுபவை. காணாமற்போன நம் பொக்கிஷங்களை நாம் மீண்டும் கண்டுபிடிப்பது வாழ்வை வளமாக்க இந்நூல்கள் உச்சாகத்தை அளிக்கின்றது. அனைவரும் படிக்க வேண்டிய அருமையான நூல்கள்.

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

### படித்ததில் பிடித்தது

எந்த ஒரு பன்னாட்டு நிறுவனங்களிலும் (SIR) சார் என்று அழைக்கக்கூடாது. முதல் பெயர் (First Name) சொல்லித்தான் அழைக்க வேண்டும். ஆனால் ஆங்கிலேயர் நமக்கு அளித்த அடிமை வார்த்தையை இன்று வரை பெருமையாகச் சிலர் வழக்கத்தில் பயன்படுத்தி வருகின்றனர். Sir.... சார்.... என்று ஒருவரை அழைப்பதை அவர்களும் விரும்புவார்கள். ஆங்கிலம் பேசி விட்டோம் என்று நாமும் மகிழ்வோம். அதன் அர்த்தம் என்ன?

Slave I Remain... என்பதன் சுருக்கமே SIR. அதாவது நான் உங்களின் அடிமை என்பதை மறுபடியும் நினைவூட்டுகிறேன் என்பதே. ஒரு காலத்தில் அடிமைகள் மட்டுமே சொல்லும் ஒரு வாசகம் சார் (Sir). முடிந்தவரை தயவுசெய்து இனிமேல் யாரையும் அப்படி அழைக்காதீர்கள். முயற்சி செய்து பார்ப்போம்.

# வழிபாடு வாழ்வாகுமா!!

23



அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

**1. பெருநாட்கள்**

பெருவிழாக்கள் எந்த திருவழிபாட்டுக் காலத்தில் இடம்பெறுவதாயினும் அதற்கான சிறப்பு முக்கியத்துவம் இடம்பெற வேண்டும். இப் பெருவிழா, திருப்புகழ் மாலையின் மாலைப்புகழ் ஒன்றுடன் ஆரம்பமாகி அதாவது திருவிழாவின் முதல் நாள் மாலையுடன் ஆரம்பமாகி திருப்புகழ் மாலையின் மாலைப்புகழ் இரண்டுடன் நிறைவு பெறும். பல பெருவிழாக் கொண்டாட்டங்கள் நள்ளிரவு திருவிழிப்பிலே இடம்பெறுகின்றன. இந்த நாள் திருப்பலியில் 'உன்னதங்களிலே ...' கீதமும், 'நம்பிக்கை அறிக்கையும்' சொல்லப்படும் அல்லது பாடப்படும். இலங்கையின் புனிதரான புனித யோசேவ்வாஸ் அவர்களின் விண்ணகப் பிறப்பை ஒரு பெருவிழாவாகக் இலங்கைக் கத்தோலிக்க திருஅவை கொண்டாடுகின்றது. ஆனால் ஏனைய நாடுகளிலே இதைப் பெருவிழாவாகக் கொண்டாட வேண்டிய அவசியம் இருப்பதில்லை. இதேபோல தான் ஆலய நேர்ந்தளிப்பு, ஆலய புனிதரின் அல்லது ஓர் ஊரின் அல்லது ஒரு துறவுமடத்தின் புனிதரின் விழா அவ்விடத்திற்கு மாத்திரம் பெருவிழாவாகும்.

2. விழாக்கள் திருவழிபாட்டுக் கொண்டாட்டத்தில் இரண்டாவது முக்கியத்தைப் பெறுகின்றது. இவ்விழாவுக்கான திருவிழிப்போ அல்லது திருப்புகழ்மாலையின் முதல் நாள் மாலைப்புகழோ இடம் பெறாது. விதிவிலக்காக சில திருவிழாக்கள் ஞாயிறு தினத்தில் அல்லது கிறிஸ்து பிறப்பு காலத்தில் இடம்பெற்றால் இவை மாற்றமடையும்.

உதாரணமாக மாசி மாதம் 2ம் திகதி இடம்பெறும் ஆண்டவரைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல் திருவிழாவாகும். இவ்விழாவிலே 'உன்னதங்களிலே' கீதம் மட்டும் பாடப்படும்.

3. நினைவுநாட்கள் கட்டாயமானதாகவோ அல்லது விருப்பு நினைவு நாட்களாகவோ கொடுக்கப்படுகின்றன. இதிலே மிக முக்கியமாகத் திகழ்வது என்னவெனில் புனிதர்கள் நினைவுகூரப்படுகின்றனர். நம்பிக்கை அறிக்கையிலே 'புனிதர்களின் சமூக உறவையும் நம்புகின்றேன்' என்று அறிக்கையிடுவது எமது நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் இரட்டிப்பாக்குகின்றது. கட்டாயமான நினைவு நாட்கள் வழிபாட்டு நாட்காட்டியில் கொடுக்கப்பட்டுள்ளதைப் போல அனுசரிக்கப்பட வேண்டும். ஆனால், விருப்பு நினைவு நாட்களுக்கு இவ்வாறு அமைவதில்லை. நினைவு நாட்களை அனுசரிக்கும் போது, திருப்பலியில் சொல்லப்படும் செபங்கள், திருப்பலிக்கான உடைகள் மற்றும் திருப்புகழ்மாலைத் தெரிவுகள் அனைத்துமே தீர்மானிக்கப்படுகின்றது. இந்த நினைவு நாள் அனுசரிப்பை வழிபாட்டுக் காலங்கள் தீர்மானிக்கின்றன. தவக்காலத்தில் கொடுக்கப்பட்டுள்ள நினைவு நாட்கள், விருப்பு நினைவு நாட்களாகவே கடைப்பிடிக்கப்படும். மேலும் சில சலுகைக் காலங்களின் போது குறிப்பாக மார்கழி 17-31 வரையிலான காலப்பகுதிகளில் நினைவு நாட்களுக்குரிய தலைமைச் செபங்கள் (Presidential Prayers: Collecta, Super Oblata, Post Communionem) மாற்றப்பட்டு கொடுக்கப்பட்டுள்ள திருப்பலிச் செபங்களைப் பின்பற்ற வேண்டும். இதனடிப்படையில் ஞாயிறு தினத் திருப்பலி, பெருவிழாக்கள், புனித வாரம், மற்றும் பாஸ்கா எண்கிழமை ஆகியன மிக முக்கியம் பெறுகின்றன. ஒவ்வொரு நாட்டிற்குமுரிய ஆயர் பேரவையினால் வெளியிடப்படும் வழிபாட்டு நாட்குறிப்பேட்டு நூலின் படி (Ordo) அந்நாட்டுக்குரிய சில முக்கிய தினங்கள், வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. (தொடரும்...)

# இலங்கையில் நூற்றாண்டில் தடம் பதிக்கும் அப்போஸ்தலிக்க கார்மேல் அருட்சகோதரிகள்



அருட்சகோதரி பவளராணி ஞானப்பிரகாசம் அ.கா.

2022ம் ஆண்டு மாசி மாதம் 5ம் திகதி அப்போஸ்தலிக்க கார் மேல் அருட்சகோதரிகள் ஈழத் திருநாட்டில் காலடி பதித்த நூறு வருட நிறைவை நினைவு கூருகின்றனர். 1870ல் இந்திய தீபகற்பத்தில் கல்விப் பணியினை ஆரம்பித்த அருட்சகோதரிகள் பல மாகாணங்களிலும் தம் பணியினை விஸ்தரித்தனர். இவர்களது கல்விப்பணியினைத் தெரிந்து கொண்ட அன்றைய திருமலை-மட்டு நகர் ஆயராக இருந்த இயேசு சபையை சேர்ந்த கஷ்டன் றொபிஷே ஆண்டகையின் வேண்டுகோளுக்கிணங்க அப்போஸ்தலிக்க கார்மேல் அருட் சகோதரிகள் தம் கல்விப்பணியினை இலங்கையிலும் ஆற்ற 1922ம் ஆண்டு இயற்கைத் துறைமுகத்தை தன்னகம் கொண்ட, பிறநாடுகளினால் விரும்பப்பட்ட திருமலையில், தம் பணியினை ஆரம்பித்தனர். அன்றைய அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் தலைவியாக இருந்த அருட்சகோதரி அல்சியா அவர்களின் தூரநோக்குப் பார்வையும், துணிவும், பெண்களின் கல்வி மேம்பாட்டில் இருந்த அக்கறையும், மறைபரப்பில் இருந்த ஆர்வமும் கடல் கடந்து இலங்கை நாட்டில் தம் பணியினை ஆரம்பிப்பதற்கு, அருட்சகோதரிகளை அனுப்புவதற்கு முக்கிய காரணியாக இருந்தது. திருமலையில் உள்ள புனித சூசையப்பர் கன்னியர் இல்லத்தில் சேவை செய்து கொண்டிருந்த குளுனி சபையை சேர்ந்த பிரான்ஸ் நாட்டு அருட்சகோதரிகள், தம் தாய் நாட்டிற்குத் திரும்புவதன் காரணமாக, அப்போஸ்தலிக்க கார்மேல் அருட்சகோதரிகள், அப்பணியினைத் தொடர்ந்து முன்னெடுக்க அழைக்கப்பட்டிருந்தனர். எனவே அருட்சகோதரிகளான லூட்ஸ், கிறசன்ஸ், கிளேயா, ஜீஸ்டின் ஆகியோர் திருமலையில் மகளிர் ஆங்கிலக்கல்வி, ஒழுக்கம், உருவாக்கத்தில், தம்மை முழுமையாக அர்ப்பணித்து, சேவையினை ஆரம்பித்தனர். இவர்கள் புனித மரியாள் தமிழ் ஆங்கிலப் பாடசாலையினையும், பெண்கள்இல்லத்தையும் பொறுப்பெடுத்து கல்வி, ஆன்மீக, சமூகப் பணியினை ஆர்வமுடன் முன்னெடுத்தனர்.

திருமலையில் ஆரம்பித்த அவர்களது பணியானது ஏனைய மறைமாவட்டங்களிற்குப் பரவி இன்று நாற்பதுக்கும் மேலான கன்னியர் மடங்களில், பணியாற்றி வருகின்றார்கள். பெண்களின் கல்வி அபிவிருத்திக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும், கிறிஸ்தவ விழுமியங்களின் வளர்ச்சிக்கும், முதன்மையிடம் கொடுத்து சமூகத்தில் சிறந்த பண்பாளர்களாக வாழ பயிற்சி கொடுப்பதுடன், காலத்தின் தேவைகளை உணர்ந்து இதர சமூக நலப் பணியினையும் ஆற்றி வருகின்றார்கள். எம் ஸ்தாபகர் வணக்கத்திற்குரிய அன்னை வெரோணிக்கா இந்தியாவில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினை ஆரம்பித்ததன் முதல் நோக்கமே இந்தியாவில் கத்தோலிக்க பெண்களின் கல்வியினையும், மறை அறிவினையும் மேம்படுத்துவதாகும்.

ஆங்கிலப் பெண்ணான சோபியா லீவ்ஸ் பிறப்பினால் ஒரு அங்கலிக்கன் குருவின் மகளாக ஐரோப்பாவில் பிறந்தவராவார். அங்கிலிக்கன் குருக்கள் பரம்பரையில் உதித்த இவரது தந்தையான லீவ்ஸ் பன்மொழித் திறமையுள்ள, விசுவாசத்தில், பக்தியில், ஆழமுள்ள பலதரப்பட்ட கலையார்வமுள்ளவராக இருந்ததினால், சோபியும் அதனைத் தன்னகத்தே வளர்த்து பன்மொழி அறிந்தவராக, கல்வி கற்றவராக, சங்கீதத்தில் பாண்டித்தியம் பெற்றவராக, வளர்க்கப்பட்டார்.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்குப் பலமுறை பயணம் மேற்கொண்டவராக பரந்த அறிவும், இறைசித்தத்திற்கேற்ப வாழும் ஆன்மீகத்தையும் கொண்டவராக விளங்கினார். வேதாகமத்தைக் கிரேக்க மொழியில் மொழி பெயர்த்த அவரது தந்தை, தமது பிள்ளைகளுக்கு தினமும் வேதாகமத்தை வாசித்து, செபிக்கும் பழக்கத்தையும் கற்றுக்கொடுத்தார். ஆவரது தாய் மரீனா லீவ்ஸ் இராணுவ பரம்பரையில் உதித்தவராக மிகுந்த பக்தியுள்ளவராக, மிகவும் துணிச்சலுள்ள பெண்ணாக, தம் சமயத்தில் மிகுந்த பற்றுள்ளவராக இருந்தார். தம் பிள்ளைகளை மிகுந்த கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கத்துடனும் வளர்ப்பதற்காக பாடசாலைகளுக்கு அனுப்பாது, வீட்டில் தானே திறமையுள்ள ஆசிரியர்களை வைத்து கல்வி கற்பித்தார்கள். சமூக நலப்பணியில் ஈடுபாடுள்ள தாய் ஏழைச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்தார். இவ்வாறு கல்வியிலும் பக்தியிலும் பிறர்நலப்பணிகளிலும் வாழ்ந்த குடும்பப் பின்னணியில் வளர்ந்த எம் ஸ்தாபகர் தன் 17வது வயதில் தன் சகோதரியுடன் இணைந்து, கத்தோலிக்க சமயத்தின் அச்சாணியாக விளங்கும் தேவ நற்கருணையில் உள்ள இயேசுவின் பிரசன்னத்தை விசுவசித்து தம் சமயத்தில் இல்லாத இந்த மறையுண்மையை ஏற்று, கத்தோலிக்க சமயத்தில் திருமுழுக்கு பெற்றார்கள். இதனால் குடும்பத்திலும் சமூகத்திலும் பல எதிர்ப்புகளை சந்தித்தாலும் ஆன்மீக விசுவாச வாழ்வினை இறுகப்பற்றிக் கொண்டார்கள்.

இறைமகன் இயேசு தனது பணி தொடர காலத்திற்குக் காலம் தலைவர்களை அழைத்துக் கொள்வதற்கிணங்க சோபியும் இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டார். தனது தாயினால் அவருக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த வாழ்க்கைத் துணைவரைத் துறந்து, துறவற வாழ்வில் அவ ரும் அவரது சகோதரியும் இணைந்து கொண்டனர். புனித சூசையப்பர் துறவற சபையில் தன்னை இணைத்துக் கொண்ட சோபி, ஐரோப்பா, இந்தியா, ரங்கூன் போன்ற பணித்தளங்களில் கல்விப்பணியிலும், சமூகநலப்பணியிலும் ஈடுபட்டார். இறைவன் இயேசுவின் அழைப்பினால் உந்தப்பட்ட அவர் பலரின் ஆன்மீக வழிநடத்தலின்படி ஆழ்நிலைத் தியான கார்மேல் துறவற சபையில் இணைந்து செபத்தில் தன்னை ஆழப்படுத்தி, பலவித அனுபவங்களையும் பெற்றுக் கொண்டார். பின்னர் கார்மேல் சபை அருட்தந்தை, பிற்காலத்தில் ஆயரான மாறி எப்றமுடைய வழிகாட்டலில் இந்தியாவில் கத்தோலிக்க பெண்களின் ஆன்மீக கல்வி வளர்ச்சிக்காக, அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினை ஆரம்பித்தார். ஐரோப்பாவில் 1868ல் பிரான்ஸ் நாட்டில் பெயோன் நகரில் ஆரம்பித்த இத்துறவற சபை 1870ல் இந்திய தீபகற்பத்தில் மங்களூரில் காலடி பதித்தது.

இலங்கையில் 1922ல் தம் பணியினை ஆரம்பித்த அப்போஸ்தலிக்க கார்மேல் சபை கல்விப்பணியுடன் இன்று முன்பள்ளிச் சிறார்களின் கல்வியிலும், பெற்றோரை இழந்த வறிய பெணகளுக்காக மகளிர் இல்லங்களிலும், யாரும் இன்றித் தவிக்கும் வயோதிபர்களைப் பராமரிக்க வயோதிபர் இல்லங்களிலும், மறைக் கல்வி, சமூக நலபணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி இறையரசின் மதிப்பீடுகளைப் பரப்பி வருகின்றனர். இலங்கை நாட்டில் மட்டுமின்றி பாகிஸ்தான் நாட்டிலும் அருட்சகோதரிகள் ஆங்கில சுதேச பாடசாலைகளிலும் சமூக நல மறைப்பணிகளில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். திரு அவையின் பல்வேறு தேவைகளிற்கேற்ப தம் சேவை மூலம் இறைவனில் தம் நிறைவு எனும் அருட்கொடையினை தம் வாழ்விலும் பிறர் வாழ்விலும் அனுபவிக்க பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபை, பங்குத்தளங்களில் கார்மேல் மொட்டுக்கள் எனும் சிறியவர்களுக்கான பக்தி சபையையும், அப்போஸ்தலிக்க கார்மேல் துணையாளர் எனும் பெண்களுக்காக பக்திச்சபையையும் ஆரம்பித்து குடும்பங்களில் சமூகங்களில் இயேசுவின் இராச்சியத்தை பரப்பிட பணிபுரிகின்றார்கள். இந்நூற்றாண்டையொட்டி மாகணத்தலைவியின் ஏற்பாட்டின்படி, அருட்சகோதரிகள் பணிபுரியும் பங்குத்தளங்களில் பலவித செயற்பாடுகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இன்றைய தொற்றுநோயின் காரணமாக மக்கள் வாழ்வில், சமூக வாழ்வில் ஏற்பட்டுள்ள அடிப்படைத் தேவைகளை கருத்திற்கொண்டு கல்வி மற்றும் சமூக நல செயற்பாடுகளை செய்வதற்கான, சில திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இயேசுவின் அன்பைப் பகிர்ந்து கொள்ள, அவர் செய்த அன்பு பணியினைத் தொடர்ந்து ஆற்ற, அனைவருடனும் இணைந்து கிறிஸ்து அரசைக் கட்டியெழுப்பப் பணிபுரிகின்றனர்.

# காவலன் கலசம்

## தவக்காலம் ஓர் கண்ணோட்டம்



அருட்.சகோ. வி.ஜெ.யேசுதாஸ்
புகுமுக மெய்யியல்

கத்தோலிக்கர்களாகிய நாம் திருவழிபாட்டு ஆண்டின் முக்கியமான காலமாகிய தவக்காலத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த அருளின் காலமாகிய தவக்காலம் பற்றி நாம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய ஆனால் இன்றும் எம்மில் பலர் அறிந்திராத திருச்சபையின் சில அடிப்படையான விடயங்கள் பற்றி இக்கட்டுரை உங்களோடு பேசும் என நம்புகின்றேன்.

தவக்காலம் என்றால் என்ன என்று கேட்டால் அது அருளின் காலம், எம்மை இறைவனோடு இணைக்கும் காலம், நோன்பின் காலம் என்று பலரும் பலவிதமான பதில்களைக் கூறுவோம். ஆம் உண்மை. ஆனால் தவக்காலம் என்பது ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவைச் சந்திப்பதற்காக எம்மை தயார்ப்படுத்தும் காலமே தவிர வேறொன்றுமில்லை. அன்பானவர்களே தவக்காலம் பற்றிச் சிந்திக்கின்ற பொழுது சுயமாகவே எம்மிடையே சில கேள்விகள் எழலாம்.

**1. நாம் தவக்காலத்தினை 40 நாட்கள் என்ற காலவரையறைக்குள் கணித்திருக்கின்றோம். எவ்வாறு திருச்சபையிலே தவக்காலம் 40 நாட்களைக் கொண்ட காலவரையறையாகக் கணிக்கப்பட்டது?**

தவக்காலம் என்பது எமது திருச்சபை வரலாற்றிலே நேற்றோ இன்றோ ஆரம்பமானதோ அல்லது சடுதியாகத் தோன்றியதோ அல்ல. அது நீண்டகால அளவில் படிப்படியாக உருவெடுத்ததொன்று. இது நான்காம் நூற்றாண்டில் இருந்தே அனுசரிக்கப்பட்டு வருகின்ற விடயம்.

ஆண்டவர் இயேசுவினுடைய மரணத்திற்கு பின் அவரது இறப்பை எண்ணித் திருத்துாதர்கள் கண்ணீர்விட்டுக் கதறி அழத்தொடங்கினார்கள். உணவின்றி நோன்பிருக்கத் தொடங்கினார்கள். அவர்களது நோன்பு காலை மாலை என கால வரையறையைக் கொண்டிருந்தது. அவர்களது நோன்பு 40 மணித்தியாலங்களாக இருந்தது அதன் பின்னர் இரண்டாம் நூற்றாண்டிலே இந்த 40 மணித்தியால நோன்பு மூன்று நாட்களைக் கொண்ட விழாவாக மாறியது. ஒரு நாளில் ஒரு நேர உணவு மட்டுமே உண்டார்கள். இரவு மட்டுமே உண்டார்கள். அதுவும் அப்பம் தண்ணீர் என அவர்கள் உணவு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. செபத்தோடு கடந்தது அவர்களது நோன்பு. பின்னர் மூன்றாம் நூற்றாண்டிலே அலெக்சாந்திரியாவில் சில பாவிகள் இந்த மூன்று நாட்களைக் கொண்ட விழாக்காலத்திலே தமது பாவங்களை எண்ணி சாக்குடுத்தி உடல் முழுதும் சாம்பல் பூசி பாவ நாட்களின் விழாவாக ஒரு வாரம் முழுவதும் அனுசரித்தார்கள். இவ் விழா காலப்போக்கில் தொடர்ந்தும் அனுசரிக்கப்பட்டு வந்தது. பின்னர் நான்காம் நூற்றாண்டிலே கி.பி325 இல் முதலாவது நிசேயா பொதுச்சங்கத்திலே திரு அவை நாம் அனைவரும் பாவிகளாக இருக்கின்றோம். எனவே அனைவரும் சாம்பல் பூசி நோன்பிருக்கட்டும் என 3 நாட்கள் கொண்ட விழாவை 40 நாட்களைக் கொண்ட காலப்பகுதியாக அருளின் காலமாக தவக்காலமாக அறிவித்தது. இவ்வாறு திருத்துாதர்களால் 40 மணித்தியாலங்கள் அனுசரிக்கப்பட்ட நோன்பு ஆண்டளவுகளில் 40 நாட்களாக உருமாறியது.

**02. ஏன் நாற்பது நாட்கள்?**

நாற்பது நாட்கள் என்பது வேதாகமத்திலே பழைய ஏற்பாடு தொடங்கி புதிய ஏற்பாடு வரை தொடர்ந்து நிலவி வருகின்ற ஒரு கால வரையறை. ஆண்டவர் இஸ்ராயேல் மக்களை பாலைநிலத்தினுாடாக வழிநடத்தி வந்த ஆண்டுகள் நாற்பது

" உங்கள் கடவுளாகிய ஆண்டவர் நீங்கள் செய்த அனைத்திலும் உங்களுக்கு ஆசி வழங்கியுள்ளார். இப்பெரும் பாலை நிலம் வழியாக நீங்கள் நடந்து வருவதை அவர் அறிவார். இந்த நாற்பது ஆண்டுகளும் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களோடு இருந்துள்ளார் " ( இணைச்சட்டம் 2:7 )

✪ மோசே மலை மேல் தங்கியிருந்த நாட்கள் நாற்பது பகலும் நாற்பது இரவும் " மோசே மேகத்தின் இடையே புகுந்து மலைமேல் ஏறிச்சென்றார். மோசே மலை மேல் நாற்பது பகலும் நாற்பது இரவும் தங்கியிருந்தார் " ( விடுதலைப்பயணம் 24:18 )

✪ ஒரேபூ மலையை அடைய எலியாவிற்கு எடுத்த நாட்கள் நாற்பது பகலும் நாற்பது இரவும் " அப்பொழுது எலியா எழுந்து உண்டு பருகினார். அவ்வுணவினால் வலிமை அடைந்த அவர் நாற்பது பகலும் நாற்பது இரவும் நடந்து ஒரேபூ என்ற கடவுளின் மலையை அடைந்தார். " ( 1அரசர் 19:18 )

✪ தாம் உருவாக்கிய உயிரினங்களை அழிக்க கடவுள் மண்ணுலகின் மேல் மழை பொழிந்த நாட்கள் நாற்பது பகலும் நாற்பது இரவும்

" இன்னும் ஏழு நாட்களில் மண்ணுலகின் மேல் நாற்பது பகலும் நாற்பது இரவும் நான் மழை பெய்விக்கப் போகின்றேன். நான் உருவாக்கிய உயிரினங்களை எல்லாம் இந்த நிலத்திலிருந்து அழித்தொழிக்கப் போகின்றேன்."
( தொடக்கநூல் 7:4 )

✪ நினிவே நகர் மக்கள் மனம்மாற இறைவனால் அளிக்கப்பட்ட நாட்கள் நாற்பது " யோனா நகருக்குள் சென்று ஒருநாள் முழுதும் நடந்த பின் உரத்த குரலில் இன்னும் நாற்பது நாளில் நினிவே அளிக்கப்படும் என்று அறிவித்தார்." ( யோனா 3:4 )

✪ இயேசு பாலைநிலத்தில் நோன்பிருந்த நாட்கள் நாற்பது பகலும் நாற்பது இரவும் " இயேசு நாற்பது நாள் இரவும் பகலும்நோன்பிருந்தார். அதன்பின் பசியுற்றார்." ( மத்தேயூ 4:2 )

" பாலைநிலத்தில் அவர் நாற்பது நாள் இருந்தார். அப்போது சாத்தானால் சோதிக்கப்பட்டார். அங்கு காட்டு விலங்குகளிடையே இருந்தார். வானதுாதர் அவருக்குப் பணிவிடை செய்தார்கள்." (மாற்கு 1:3)

"இயேசு நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார். அந்நாட்களில் அவர்ஒன்றும் சாப்பிடவில்லை. அதன்பின் அவர் பசியுற்றார்." ( லூக்கா 4:2 )

( தொடரும் ...)

## இறையருளில் நீந்திட ...

**முன்னுரை**

தவக்காலம் இறைவன் மனிதர்களாகிய எங்களுக்கு வழங்கும் அன்புக் கொடைகளில் ஒன்று. மிக மிக அருமையான காலம். ஆண்டு முழுவதும் பரபரப்பாகிப் பல்வேறு கடமைகள் பொறுப்புகளால் வருகின்ற சோதனைகள், வேதனைகள், தோல்விகள்,ஏமாற்றங்கள், விரக்திகளால் மூழ்கடிக்கப்படும் நாம் எமக்குள் சென்று எம்மையே உள்ளார்ந்த ஆய்வு செய்து, எம் வாழ்வைச் சீர்தூக்கிப் பார்த்து கழுவிப் புடமிட்டு, உரமிட்டுப் புது உறவை வளர்க்கும் காலமாகும்.

எம்மைச் சுற்றி இறையருள் இறைவன், மனிதன், உலகம் (பிரபஞ்சம் உட்பட) ஆகிய இம் மூன்றிற்குள்ளும் அடங்கிவிட்ட அனைத்தின் வழியாக இறையருள் எமக்கு வாரி வழங்கப்படுகின்றது. இரக்கமுள்ள இறைவன் தருகின்ற இறையருளின் சந்தர்ப்பங்களை நாள்தோறும் நாம் கவனமுடன் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த வேண்டும். தவறுவோமாயின் நாம் தொலைந்து விடுவோம். என்னால் எல்லாம் செய்யமுடியும். வேறெவரும், வேறெதுவும் எனக்குத் தேவையில்லை என்னும் அசட்டுத்துணிவுடன் எம்மை மட்டும் நம்பிப் புறப்படக் கூடாது. ஏனெனில் எம்மைச் சுற்றி நிகழ்ந்து கொண்டிருப்பவை யாவும் சரியாக இயங்கி இறையருளை எமக்குத் தராவிடில் விரக்தியும் அவநம்பிக்கையுமே மிஞ்சும்.

எடுத்துக்காட்டாகப் பரீட்சைக்குத் தோற்றும் ஒருவருக்கு அவர் கற்ற கல்வியோ, தன்னிலே அவர் வைத்திருக்கும் நம்பிக்கையோ மட்டும் கைகொடுக்காது. மாறாகத் தண்ணீரில் மீன் இருப்பது போல் அவர் எப்பொழுதும் இறையருளில் நீந்திக் கொண்டேயிருக்கவேண்டும். வீட்டுச் சூழல், காலநிலை, பிரயாணம், சென்றடையும் நேரம், அனுமதி அட்டை மற்றும் எழுதுகருவிகள் மறவாமை, பரீட்சை நிலைய அமைதியான சூழல், பொருத்தமான இடம் போன்றவை சரியாக அமையவேண்டும். ஒரு சிறு தவறு ஏற்படுமாயின் பரீட்சைக்கான அருள்நிலை இல்லாமற் போய்விடும். அதுபோல் ஒரு வாகனத்தை ஓட்டும் போது மிகவும் திறமையான ஓட்டுனராக இருந்தாலும் கூட, தனது திறமையில் மட்டும் எவரும் நம்பிக்கை வைக்க முடியாது. வாகன நெரிசல், காலநிலை மாற்றம், ஏனைய வாகனங்கள் தவறுதலாக வந்து மோதுதல், ஓட்டும் வாகனத்தில் திடீர்பழுது ஏற்படுதல் போன்றவை நிகழாமல், எல்லாமே சரிவர இயங்கவேண்டும். இல்லாவிடில் இலக்கையடைய முடியாது. எனவே எம்மைச் சுற்றி நிகழ்பவை யாவும் இறைசித்தப்படி, சரியாக எமக்கென இறைவனால் நிகழ்த்தப்படுவதே இறையருள் ஆகும். எனவேதான் என்ன நேர்ந்தாலும் தந்தையாகிய இறைவனுக்கு இயேசுக் கிறிஸ்து வழியாகத் தூயஆவியாரில் நன்றி கூறுங்கள் என்று புனித பவுல் கூறுகின்றார்.

காத்திருத்தல் இனிமையானது இரக்கமுள்ள இறைவன், மனிதர்களாகிய எமக்கென வகுத்திருக்கும் மாபெரும் திட்டப்படி எல்லாருக்கும் "காய்களை நகர்த்து" கின்றார். எடுத்துக்காட்டாக, நாம் விரும்புவதைச் சரியாக நிறைவேற்றுவதற்காக

அருட்பணி. C.J.அன்ரனியாலா

எம்முடன் தொடர்புடையவர்கள் மற்றும் தொடர்புடையவைகளை சரியாகக் "காய் நகர்த்தி" ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டே எமது செயல்களை நாம் செய்ய அவர் அனுமதிக்கின்றார். அவரது அனுமதிக்காகவும் செயலாற்றலுக்காகவும் நாம் செபத்தின் வழியாகக் பொறுமையோடு காத்திருக்காமல் அவசரப்படுவோமாக இருந்தால் தேவையற்ற துன்பங்களை நாம் சந்திப்பதோடு, அவரில் அவநம்பிக்கையும் உருவாகும். தூய ஆவியாரின் துணைகொண்டு உயத்துணர்ந்து செயலாற்ற, செபத்தின் மூலம் இறையருளுக்காக (எமது விடயம் நன்றாக அமையவேண்டிய சூழ்நிலையை இறைவன் ஏற்படுத்தித் தரும்வரை) பொறுமையுடன் காத்திருத்தல், அவருக்காக நம்பிக்கையுடன் காத்திருத்தல் மிகவும் அவசியம். ஏனெனில் எமது விருப்பத்தையோ, சித்தத்தையோ, திட்டத்தையோ அல்ல, மாறாக இறைவனின் விருப்பத்தையே எப்போதும் நாம் நிறைவேற்ற வேண்டும்."என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்" (மாற் 14:36). என்று கூறிச் செபித்த இயேசு எப்போதும் தந்தையின் விருப்பத்தையே நிறைவேற்றினார். இம்மனமாற்றத்தின் காலம் இறையிரக்கத்திற்காக அதாவது இறையருளுக்காக ஏங்குகின்ற காலமாகும்.

(அடுத்த இதழில் தொடரும்...)

**கடமையின்...** ( 07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதைப்பற்றியும் முறையிடார், எவரையும் குறைகூறார். அளவான பேச்சு இவரது பாணி. இவ்வாறு இவர் அனைத்திலும் கட்டுப்பாட்டோடு நடந்துகொள்வார்.

**7. அனுபவமுள்ளோரின் ஆலோசனை பெறுதல்:** இவர் புனித மடுத்தீனார் சிறிய குருமட இயக்குநராக விளங்கியபோது அருட்தந்தை அட்றியன் யோசப் (அமதி) அடிகளார் புனித யோசப் சிறிய குருமட அதிபராக இருந்தார். இவர் அவரிடம் சென்று பல்வேறு விடயங்கள் பற்றி ஆலோசனை பெற்று வருவார்.

**8. தலையிடாமை:** யாழ் இடப்பெயர்வின்போது அருட்தந்தை முகமாலைப் பகுதியிலுள்ள அவரிக்காட்டுத் தென்னந்தோட்டத்தில் வசித்து வந்தார். அங்கு அவர் அடிப்படை வசதிகளின்றி இருப்பதை அவதானித்து என்னுடன் வந்து தங்கும்படி கேட்க சம்மதித்து வந்தார். என்னோடு வாழ்ந்த காலத்தில் எனக்கு எவ்வித இடைஞ்சலுமின்றி இருந்ததோடு, நிர்வாக விடயத்தில் எந்தத் தலையீடும் செய்யாது அமைதியாக இருந்தார். இக்காலம் நான் அவருக்கு நன்றிகாட்டக் கிடைத்த பொற்காலமென எண்ணி மகிழ்ந்தேன்.

**9. மொழிப் புலமை:** தந்தை அவர்கள் இலத்தீன், இத்தாலியன், ஆங்கிலம் போன்றவற்றிலும், தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்றவர். எனது மொழிபெயர்ப்பான 'அன்பின் உள்ளார்ந்த குரல்' எனும் நூலைச் சரிபார்த்துத் தருமாறு கேட்டபோது நேரமெடுத்துப் பொறுமையோடு அப்பணியைச் செவ்வனே செய்து முடித்துத் தந்தார்.

**10. குருமட மாணவர்களின் உருவாக்கம்:** குருமட மாணவர்களின் உருவாக்கும் பற்றிப் பின்வருமாறு பழைய தமிழில் கூறுவார், 'பத்தி, புத்தி, புஷ்டி' அதாவது குருமட மாணவன் பக்தியாகவும், புத்தி நிறைந்தவராகவும் உடல் ஆரோக்கியம் கொண்டவராக விளங்க வேண்டும்என்பது இவரது கருத்து. இவர்நம்மை உருவாக்கிய விதம் இவற்றையே அடிப்படையாகக் கொண்டு விளங்கியதைக் கண்டோம். பெரும்எண்ணிக்கையான மன்னார், யாழ்ப்பாணக் குருக்களின் உருவாக்கத்தில் இவரது பங்களிப்பு மிகவும் கணிசமானது.

**11. மனிதரை அறியும் அறிவு:** குருமட மாணவர்கள் விளையாடிக்கொண்டிருக்கும் போது அவர்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்பதை அவதானித்துக் கொண்டேயிருப்பார். ஒரு பிற்பகல் குருமட மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருக்கும்போது, அவரருகே நின்று அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அப்போது அவர் கூறினார், 'ஒருவர் எப்படியானவர் என்பதை அறிய வேண்டுமானால் அவரை உணவு உண்ணும் இடத்திலும், விளையாடும் இடத்திலும்தான் அவதானிக்கவேண்டும். இங்கேதான் அவர்களின் உண்மையான குணம் தெரியவரும்.' என்றார். இவரது ஆழமான இந்த உளவியல் அறிவு எவ்வளவு உண்மையானது என்பதைப் பின்னர் என் அனுபவத்திலும் கண்டிருக்கின்றேன்.

**நிறைவாக:** ஆண்டவர் இவரை விண்ணக ஒளியில் ஏற்று மகிழச் செய்திட அவருக்காகச் மன்றாடுவோம்.

# காவலன் கலசம்

## தமிழ் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி




**நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.**

*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

*1.2 திரு அவை இறையியலாளர் என்ற நிலையும் (Professor of Ecclesiology) பணியின்போது பெற்ற பட்டறிவும் என்னை ஊக்குவிக்கின்றன*

போர்க் காலத்தில், இலங்கை புத்த சிங்கள ஊடகங்களினாலும் அரசாங்கத்தினாலும் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டேன். தனியாக அவைகளை எதிர்த்துப் பணி செய்ய முடியாததினால், தாய் நாட்டை விட்டு வெளியேறினேன். 21 வருடங்கள் ஜேர்மனியில் வாழ்ந்து, ஜேர்மன் திரு அவைக்கும் உலகில் பரவிவாழும் புலம் பெயர்ந்த தமிழர் மத்தியிலும் பணி செய்தேன். 2015ம் ஆண்டு அரசாங்கத்தினால் மீளவும் தாய் நாட்டிற்கு அழைக்கப்பட்டு, 2017ம் ஆண்டு மார்கழி நாடு திரும்பினேன்.

இந்நிலையில், 2019ம் ஆண்டில் தமிழில் சில சிறு புத்தகங்களை வெளியிட்டேன். அவை
1) முடிந்த முள்ளி வாய்க்காலும் தொடரும் போராட்டமும்
2) இனப் பிரச்சினையும் இலங்கைத் திருச்சபையும்
3) பொது நிலை யினரின் முதிர்ச்சி
4) பொது நிலை யினரின் எழுச்சி என்பனவாகும்.

தாய் நாடு திரும்பியதும் எனது தாய்த் தமிழ் சமூகத்தையும், அதன் மத்தியில் இருந்து இயங்கும் கிறிஸ்தவ திரு அவைகளையும், கிறிஸ்தவர்களையும், கூர்மையாக அவதானித்தேன். தெளிவாக எனது கவனத்தையும் இரக்கத்தையும் ஈர்த்தவைகள் பல. மாற்றங்களின் தேவையைக் கூர்மையாக உணர்ந்தேன்.

***1.3 இலங்கை இனப் பிரச்சினை-போர் மத்தியில், கிறிஸ்தவ திரு அவைகளின் செயற்பாட்டில் ஏமாற்றமடைந்தேன்***

16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து எமது மண்ணில் மாற்று நடுகை செய்யபட்ட ( transplanted churches) திரு அவைகள் இலங்கையில் மற்ற மதங்களுக்கிடையில் சிறுபான்மையாக இருந்தாலும், கடந்த 70 வருடங்களாக இம் மண்ணில் நடக்கும் அநீதிகள் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் துயரங்கள் மத்தியில் கிறிஸ்துவின் அவைகளாக இருக்கவில்லை: இயங்கவில்லை. இவை எனது ஏமாற்றம்! நீண்டபோரின் அழிவுகளைத் தன்னும், சரியாகப் புரிந்து பணி செய்ய முடியாததை இட்டு வருந்துகிறேன்.

அன்று தனித்தவனாக எனது குரு முதல்வர் பணி களை, திரு அவைகளின் மௌனத்தின் மத்தியிலும் செய்ததின் காரணமாக, நான் தவறாகத் தீர்பிடப்பட்டேன். என் அபிப்பிராயங்களையும் செயல்களையும் விளக்க கொழும்பு ஆங்கில ஊடகங்களுக்குக் கடிதங்கள் எழுதி விளக்கியிருந்தேன். அத்துடன் 1994ல் ஆங்கிலத்தில் Church politics and war in Sri Lanka என்ற சிறிய நூலையும் வெளியிட்டேன். இருந்தும் என் மேல் தவறான விமர்சனங்கள், பொய்யான குற்றச் சாட்டுகள், தென் இலங்கையின் சிங்களப் புத்தரிடமிருந்து அதிகரிக்க, திரு அவைத் தலைவர்கள் எவரும் எனக்காகக் குரல் கொடுக்க இல்லாததால், 1996 செப். ஐரோப்பா சென்றேன்.

அங்கிருந்து ஜேர்மன் முன்ஸரர் மறைமாவட்டத் திரு அவைக்கும், உலகம் முழுவதும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுடனும் இணைந்து, ஈழத் தமிழருக்காக சர்வதேச மட்டத்தில் குரல் கொடுத்தேன். 2010ம் ஆண்டு தொடக்கம் 2020 ஆண்டுவரை உலகத் தமிழர் பேரவையின் தலைவராக, பற்பல நாடுகளுக்குச் சென்று மக்களையும் அரசாங்கங்களையும் சந்தித்து இலங்கையில் சமாதானம் ஏற்படுத்த முயன்றேன். ஜெனீவாவில் இயங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டங்களில் 25 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பங்கு பற்றினேன்.

இன்றும் இலங்கைத் திரு அவைகள் மக்களின் பிரச்சினைகளிலும், தற்போதைய அரசாங்கம் பாதுகாப்புப் படைகளை நெருக்கமாக இணைத்து செயற்படுவதையும், ஜனநாயகம் குறைந்து சர்வதிகாரம் மக்களை அடக்கி ஒடுக்க முயற்சிக்கும் நேரத்தில், மௌனமாகச் செயலற்றிருப்பது கோழைத்தனம்.

கொரோணா அபாயத்தை சாட்டாக வைத்து, தலைவர்கள் துன்புறும் மக்களிடமிருந்து தூர நிற்பதும் சரியல்ல. வழிபாடுகளைக் குறைப்பதுடன் நின்று விடாது, மாற்று வழிகளைத் திறந்து இல்ல-திருஅவைகளை ஊக்கபடுத்த வேண்டும்.

(தொடரும்...)

## உதவி வழங்கல்

ஏழை மாணவர்களின் கல்வியில் ஊக்கம் காட்டி அவர்கள் சிறந்தமுறையில் கல்வி கற்பதற்கு வாய்ப்பு வழங்குவோம். செல்வந்தர் தமது பிள்ளைகளுக்குக் கல்வி சார்பாக அதிக கவனிப்பும் நேரமும் செலவிடுகின்றனர்.

அதேவேளை ஏழைகள் தமது பிள்ளைகளின் கல்வி சார்பாகப் போதியளவு அக்கறை காட்டுவதில்லை. இந்நிலையை மாற்றியமைக்க முயற்சி எடுப்போம். வறுமை எனும் நச்சு வலயத்திலிருந்து மக்களை விடுவித்து சிறுவர்களுக்கான கல்வியை மேம்படுத்துவோம். கல்வி அபிவிருத்தி, திறன்சார் அபிவிருத்தி மூலமாக வறுமைச் சங்கிலியை உடைத்தெறிந்து வருமானத்தை மீள் மறு பங்கீடு செய்வோம்..

எடுப்பதை அல்ல, கொடுப்பதையே முதன்மைப்படுத்தி, இல்லாமையை இல்லாமல் செய்வோம்.

**"மண்குடிசை வாசல் என்றால்**
**தென்றல் வர மறுத்திடுமா?**
**மாலைநிலா ஏழை என்றால்**
**வெளிச்சம்தர மறந்திடுமா?"**

என்பது தத்துவப் பாடல். பாரபட்சமின்றிக் கொடுத்தலே ஆன்மீக வெளிப்பாடு ஆகும்.
"நல்லாரைக் காண்பதுவும் நன்றே - நலமிக்க
நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே - அவரோடு'
இணங்கி இருப்பதுவும் நன்றே"

*என்றார் ஔவைப் பாட்டியார்.*

இவ்வாறு நற்சமூக உருவாக்கத்திற்கு வித்திட்டு வளர்த்திட ஒன்றிணைவோம். வலுவூட்டும் உதவும் கரங்களைக் கொண்டு வீரியமான விடியலை முன்வைப்போம். பிறரை வளர்ப்பதில் சோர்வடையாது, ஆர்வத்தோடு இணைக்கும் பாலங்களாய் வாழ முன்வருவோம்.

**அருட்பணி. வின்சன் பற்றிக்**

நல்ல மனிதர்களை நாடி ஓடுவோம். எல்லாரும் எல்லாமே பெற்றநிலை உருவாகும். 'இல்லை' என்று சொல்லாமல் எல்லாருக்கும் கொடுப்போம். பொல்லாதார் இல்லாமல் போய்விடுவர். குழந்தை உள்ளம் கொண்டோராய் எளிமையோடு வாழ்வோம். சொர்க்கத்தை முன்கூட்டியே அனுபவிப்போம்.

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

ஈழத்தில் சங்கமித்த ஐரோப்பிய முத்துக்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**சிஸ். றேமன்ட் (கத்தறீன்)**

1956ம் ஆண்டு 3 வருடங்கள் முடிந்தாலும் இவரின் சாந்தகுணம், ஆளும் திறமையைப் பார்த்து 1956ம் ஆண்டு தை மாதம் 12ம் திகதி மீளவும் புதுப்பிக்கப் பட்டார். 1958ம் ஆண்டு சபைத்தலைவி சலோமைத் தாயாரை ஐரோப்பாவுக்கு அழைக்க விரும்பியதால் றேமன்ட் தாயாரை அனுராதபுரிக்கு வைகாசி 2ம் திகதி அனுப்பினர். புரட்டாதி 12ம் திகதி யாழ் மாகாணத்தலைவிக்கு 2வது ஆலோசகராக சிஸ்.றேமன்ட் நியமிக்கப்பட்டார்.

1961ம் ஆண்டு ஐரோப்பா சென்று வீட்டுச் சந்திப்பு முடிய புரட்டாதி 14ம் திகதி wood ford இல் தங்கி, பின்னர் கிறிஸ்மஸ் லீவின் போது தலைமையகம் சென்று 1962ம் ஆண்டு அனுராதபுரம் வந்து சேர்ந்தார். 1967ம் ஆண்டு கரம்பன் மடத்திற்குத் தலைவியாக நியமனம் பெற்றார். மீண்டும் 1970ம் ஆண்டு ஐரோப்பாவுக்கு கிளேனுக்கு அனுப்பப்பட்டார். அங்கு தனது வயோதிப காலத்தைச் செலவழித்து 1984ம் ஆண்டு மாசி மாதம் 20ம் திகதி இறைவனடி சேர்ந்தார். சகோதரி றேமன்ட் இறைவனின் குமாரத்தி என்ற மேலான பண்புடன், தன்னை அனுப்பும் இடங்கள் தோறும் எந்த மறுப்பும் கூறாது அமைந்து, பணிந்து வாழ்ந்த பிரமாணிக்கமுள்ள சகோதரியாக வாழ்ந்தார். சிறப்பாக அனுராதபுரத்தில் அவரோடு வாழ்ந்து, பாட-சாலையில் கற்பித்தலிலும் மற்றும் சிறுவர் பராமரிப்புப் பணியிலும் ஈடுபட்டு உழைத்த சுதேச தமிழ் சகோதரிகள் வாழ்வில் மறக்க முடியாத பல அனுபவங்களைப் பதித்துச் சென்றுள்ளார். "இறைவனுக்கே மகிமை எல்லாம் இயேசு மரி சூசை வழியாக என் பதை வாழ்ந்து காட்டிய வீரபெண்மணி, இறைவனின் நித்தியத்திற்கும் ஒன்றித் திருப்பாராக.

**சிஸ். திரேசா மோர்கன் -**
Theresa Morgan (Elizabeth)

அயர்லாந்து தேசத்தில் Sandy ford என்னும் இடத்தில் யோசவ் அன்று மரியா என்னும் பெயருடைய பெற்றோருக்கு மகளாக 1906ம் ஆண்டு சித்திரை 30ம் திகதி பிறந்தார். குடும்பத்தில் 3 ஆண்களும் 2 பெண்களும் பிறந்தார்கள். எலிசபெத் 1925ம் ஆண்டு மார்கழி மாதம் 7ம் திகதி (Rock ferry) றொக்வெரி" என்னும் இடத்தில் ஆயத்தக் கன்னிகையாகச் சேர்ந்து 1926ம் ஆண்டு ஆவணி 8ம் திகதி துறவற உடுப்புப் பெற்று சிஸ். மரிய தெரேஸ் என்னும் பெயரையும் எடுத்துக் கொண்டார். 1927ம் ஆண்டு ஆவணி 9ம் திகதி முதல் வாக்குத்தத்தம் செய்து கொண்டார்.

மிஷனறியாக விரும்பி 1927ம் ஆண்டு புரட்டாதி 13ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தார். 1929ம் ஆண்டு வெண்ணப்புவாவிற்கு அனுப்பப்பட்டு 1930ம் ஆண்டு ஆவணி 18ம் திகதி பம்பலப்பிட்டியாவில் தனது நித்திய அர்ப்பணத்தைச் செய்து திரும்பவும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டார். யாழ்ப்பாணத்தில் விடுதி மாணவிகளைப் பராமரித்து உருவாக்கும் பொறுப்பான பணி இவரிற்குக் கொடுக்கப் பட்டது. தனது பொறுப்பை அன்போடும் அர்ப்பணத்தோடும் கையேற்று, பரிவுள்ளம் கொண்ட தாயன்போடும், மாணவிகளின் குறும்புத்தனம் குழப்பங்களைத் தாங்கும், அளவுகடந்த பொறுமையோடும் அவர்களை உருவாக்கினார்.

விடுதி ஒழுங்குக் கிரமங்களுக்குப் பணிந்து வாழவும் நல்ல ஒழுக்க சீலங்களைக் கடைப்பிடிக்கவும் கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் உறுதிப்படுத்தவும் கண்ணும் கருத்துமாகப் பணி புரிந்தார். ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சி பெறவும், பாடசாலையில் சாட்சியமுள்ள முதல்தர மாணவியாக விளங்கவும், பாடசாலை முடிந்தபின் விடுதியில், அவர்களின் கற்றலின் பாடங்களை மீட்கவும் கண்காணித்து ஊக்கப்படுத்துவதிலும், ஈடுபாடு கொண்டு வாழ்ந்தார்.

**அருட்சகோதரி அம்புறோஸின் மார்க்**

(தொடரும்...)

## இளையோர் காவியம்

நீ எதிர்பார்ப்பது அல்ல
உருவாக்குவது தான் வாழ்க்கை

நீ தோல்விகளுக்குள்
கேள்விகளைத் தேடி எடு
எங்கே வாழ்க்கை
தொடங்கவேண்டும் என்று விடை வரும்

வெட்டிவிடத் தழைப்பது
மரங்கள் எடுக்கின்ற முயற்சி

இடி விழுந்தாலும்
கைவிடப்படாத வாழ்க்கைப் படி
உனக்கு வருகின்ற துன்பங்களின்
நெருக்கடியில்
வெளியேறக்கூடாது இலட்சியம்

துன்பங்கள் வாழ்க்கைப் பள்ளியில்
சாத்தான்கள் நடத்துகின்ற பாடம்

எதில் பலவீனம் இருக்கிறதோ
அங்கே குடியிருக்கிறது ஆபத்து

பலம் இல்லாத நம்பிக்கை வீதியில்
புதைந்து விடுகிறது வாழ்க்கை வாகனம்

நீ கிறுங்காது நின்றால்
சுருங்காது வாழ்க்கை

அரை குறையாய் அல்ல
தடயமே இல்லாம் தடைகளை அகற்று

வீழ்ச்சி பலவீனத்தால் மட்டுமல்ல
சூழ்ச்சிகளால் வருவதைக் கவனி
அப்போது தான் வாழ்க்கையில் வரும்
வெற்றிகளின் பவனி

(தொடரும்...)

**உயிரோவியன்**

## மறக்கப்பட்டவர்கள்

( 5ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வெடிகுண்டின் முன் நிற்பது போல வியர்க்கத் தொடங்கியது. சதாசிவத்தார் முகத்தில்ஈயாடவில்லை. ஜீவன் ஆணிய டித்துவிட்டது போல அசையாமல் நின் றான். ஒருசில நொடிகள் நீண்ட அந்த அமைதியை சதாசிவத்தார் தான் முதலில் கலைத்தார். 'உள்ள வா தம்பி.. ஏன் வாசலில நிக்கிறாய்?' ஜீவனுக்குத் தன் காதுகளை நம்பமுடியவில்லை. ஏழு வருடங்களின் பின் தன் தந்தை தன்னுடன்பேசுகிறாரென்பதை. அவர் அவனை உள்ளே வர அனுமதித்தா ரென்பதை. அவனுக்குச் சிரிப்பதா அழு வதாஎன்று தெரியவில்லை. அவரைக் கட்டி அழ வேண்டும் போல இருந்தது.

இருந்தாலும் தன்னைச் சற்று சுதாகரித்துக் கொண்டு அமைதியாக அவர் முன் போட்டிருந்த கதிரையில் அமர்ந்துகொண்டான். 'ஏதும் குடிக்கி றியா?' சதாசிவத்தார் கேட்டுக் கொண்டே 'அன்னம்....' என்று அழைத் தார். 'ஐயோ ஒண்டும் வேணாமப்பா..' அவன் இடைமறித்தான். 'வேணாமோ..' 'அவர் சற்று இழுத்தார்.

அதற்குள் அன்னம்மா வாசலுக்கு வந்துவிட்டார். மகனைக்கண்டால்இயல் பாகவே கண்ணீர் சொரியும் அன்னத் திற்கு அவன் வீட்டு விறாந்தையில் சதா சிவத்தார் முன் அமர்ந்திருந்ததைக் கண் டதும் ஆனந்தமும் அழுகையும் சேர்ந்து வந்து அடைத்துக் கொண்டது.

ஜீவன் சலனம் ஏதுமின்றி அமர்ந்திருந்தான். 'தம்பிக்குக் குடிக்க என்னவும் குடு அன்னம்' அவர் சொல்லிவிட்டு மீண்டும் அவனைப் பார்த்தார். அன்னம் உடனே சமயல றைக்கு விரைந்தார். 'என்ன விளங் குதா அப்பா?' அவன் மெல்லக் கேட்டான். 'ம்ம்..' ஜீவனுக்கு இதயம் துடிப்பது நின்று விடுவது போலிருந்தது. 'கோவம் குறஞ்சிட்டா..' அவன் கண்களில் ஏக்கம் படர அவரைப் பார்த்தான். 'எனக்கென்ன கோவமப்பன்..' அவர் மெல்லச் சிரித்துக் கொண்டே பத்திரிகையை மடித்து அருகி லிருந்த மேசையின் மேல் வைத் தார். 'பிறகு.. சொல்லப்பன், இப்பென்ன செய்யிறாய்?' அவர சகஜமாகக் கேட் டார். 'அப்பா.. கண்டியில தான். நீங்களெப்பிடி இருக்கிறீங்கள்?' கண் களில் நிறைந்த கண்ணீரைக் கட்டுப் படுத்திக் கொண்டு கேட்டான். 'எனக் கென்ன நான் நல்லாத்தான் இருக் கிறன். இவங்கள் வெளிய போக விட மாட்டாங்களாம். வீட்டுக்க கிடக்கிற தான் எரிச்சல்.. இவன் சரவணன் நிண்டா அங்கேனக்க லப்றிக்கு போற.. அப் பிடியே போகுது சீவியம்..' அவர் சலித்துக் கொண்டார். அதற்குள் அன்னம் கையில் கோப்பியுடன் வந்து சேர்ந்தார்.'குடி தம்பி..' அப்பா சொன்னார். 'அப்ப அவன் எப்ப வாறானாம்?' ஜீவன் குடித்துக் கொண்டிருந்தபோதே சதாசிவத்தார் கேட்டார். 'யாரப்பா?' அவன் கோப்பை யைத் தன் தாயிடம் கொடுத்துக் கொண்டே கேட்டான்.'அவன் தான் ஜீவன்?

' ஜீவன் உறைந்து போனான். எச்சில் உருண்டைகள் திரண்டு வந்து தொண்டையில் சிக்கிக் கொள்ள நாவெல்லாம் வரண்டு மேலண்ணத் தோடு ஒட்டிக்கொண்டது போலிருந்தது அவனுக்கு. 'அப்பா இது..'

அன்னம் அழுகையை அடக்கி கொண்டு பேச வாயெடுத்தார். 'ஜீவன்ர சிநேகிதப் பெடிதானே? கண்டிருக்கிறன் இவன..' அவர் சிரித்துக்கொண்டே சொன்னார். அதற்குமேல் அவனால் முடியவில்லை. கண்களில் கண்ணீர் பெருக 'அப்பா...' என்று முனகியபடியே சதா சிவத்தாரைக் கட்டிக்கொண்டான். சதாசிவம் திகைத்துப் போய் நின்றார். 'எட தம்பி..' அவர் பேச வாயெடுத்தார்.

'என்ன மன்னிச்சுக் கொள்ளுங்கோ அப்பா....' அவன் அப்படியே குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினான்.அவ னும் மறக்கப்பட்டு விட்டான்.

**ம.மரின் றேச்சல்**

---

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 . 11 . 1948



இறப்பு 21 . 03 . 2011

"ஆண்டவர் தம் மக்களை
தள்ளிவிடார்
தம் உரிமைச் சொத்தாம்
அவர்களை கைவிடார்"
தி.பா.94:14

அன்னாரின் ஆன்ம
இளைப்பாற்றிக்காக
செபிப்போமாக

பிரிவால் துயருறும்
சகோதரிகள்

அமரர்
**நீற்றா ஞானதீபம் சுகந்தநாதன்**
(நிர்மலா)

19 டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

AD-27

---

## 12ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 23 . 11 . 1922



விண்ணில் 02 . 04 . 2009

அமரர்
**தொமின்கி சிங்கராசா**

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 24 . 12 . 1931



விண்ணில் 09 . 03 . 2019

அமரர்
**சிங்கராசா புஸ்பநாயகி**

நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன், என் ஓட்டத்தை முடித்து விட்டேன்,
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய
வாழ்வுக்கான வெற்றிவாகையே
(2 திமொத்தேயு 4:7–8)

AD- 25

பிரிவால் துயருறும்
மகள் [குணவதி]

---

## நீங்கா நினைவில் 2ம் ஆண்டு

மண்ணில் 24 . 10 . 1966



விண்ணில் 09 . 03 . 2019

அமரர்
**யோசவ் அன்ரன் லியோ அன்ரசன்**
(மாதகல்)

மாறும் உலகில்
மறையா உம் நினைவுகளுடன்
எங்களுடன் எமக்குள் வாழும் – எம் அப்பா!
மாபரன் மலரடியில் உம் ஆன்மா அமைதிபெற
மன்றாடுகின்றோம் நிதமும்

நல்லாயன் வீதி,
சில்லாலை.

AD- 28

உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்,
உறவினர்கள், நண்பர்கள்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 - 07 - 1950



உதிர்வு 10 - 03 - 2020

அமரர்
**யேசுராஜா யேசுராணி**

ஆண்டொன்று ஆன போதும் ஆறவில்லை எம் துயரம்
அன்பின் உறைவிடமே எம் ஆருயிர் அம்மாவே
கூடி நாம் எல்லோரும் மகிழ்ந்திருக்கும் வேளைதனில்
எம் கூட்டை விட்டுப் பறந்தாயோ
சடுதியில் நீர் எம்மைவிட்டுப் பிரிந்ததென்ன
இறையன்பு பிறர் அன்பு
மரியன்னை சேவையும் உம் மனம் கண்டு
இறைவன் உம்மை அழைத்தாரோ
அம்மா எங்கள் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்கி
உன்னதரின் உறைவிடத்தில்
உமது ஆன்மா சாந்தி அடைய வேண்டுகின்றோம்

**இவரின் பிரிவால் துயருறும்**
**பிள்ளைகள்**

ஜெந்திரன்(இலங்கை, ஜெனதாஸ் (பிரான்ஸ்), காந்தன் (நோர்வே), ஜெயசீலன்(கனடா) மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்

**பரலோக மாதா கோவிலடி,**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

AD-21

---

## இரண்டாம் ஆண்டு நினைவு



மண்ணில் 08.07.1938

விண்ணில் 04.03.2019

**சின்னப்பு சின்னராசா செபரத்தினம்**

"இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய
வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதி நாளில்
ஆண்டவர் எனக்குத் தருவார்"
(2 திமொ 4:8)

அன்பினைப் பொழிந்த அப்பா
ஆருயிர் நீங்கிச் சென்றீர்!
தன்னலம் மறந்து வாழ்ந்த
தலைவனே உம்மை நாடும்!
இன்னருள் பொழியும் தேவன்
இன்புறச் செய்வார் நாளும்!
அன்பனின் நிழலில் என்றும்
அமைதியில் நீடு வாழ்க!

நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் ஆண்டவரே!
முடிவில்லா ஒளி இவர் மேல் பிரகாசிக்கக்கடவது. ஆமென்.

AD-20

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள்**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 . 10 . 1958



விண்ணில் 16 . 03 . 2020

**திருமதி ராஜகுலநாதன் மேரி அல்வினஸ்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

" அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள்;
ஏனெனில் அவர்களின் செயல்கள்
அவர்களைப் பின் தொடரும்"
(தி.வெ.14 :13)

விகோரியார் தேவாலய வீதி,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
கணவன், மகள்,
சகோதரர் குடும்பத்தினர்

AD-23

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29 . 07 . 1938



விண்ணில் 30 . 03 . 2019

அமரர்
**கென்றிக் புஸ்பராணி**

நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன (ச.ஞா.3:1)

அம்மா இரண்டு ஆண்டுகள் உங்கள் முகத்தைக்
காணாமல் எங்கள் வாழ்வு கடந்து விட்டது
நீங்கள் எங்களுக்கு ஊட்டிய விசுவாசமும்
அன்பும், பாசமும் எங்களை வழிநடத்துகின்றது
நீங்கள் ஆண்டவரோடு இருந்தாலும் எங்களோடும்
இருக்கின்றீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.
உங்கள் செபம் எங்களோடும், எங்கள் செபம்
உங்களோடும் உண்டு என்பது நிச்சயம்
உங்கள் ஆன்மா என்றும் அமைதியில் இளைப்பாறட்டும்

இவரின் பிரிவால் துயருறும்

AD-24

**கணவன்,** பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவுகள்

# அருட்பணி மேரி ஜோசப் அடிகள் காலமானார்




யாழ். மறை மாவட்டத் திருஅவையின் மூத்த குருக்களில் ஒருவரான அருட்பணி G. E. மேரி யோசப் அடிகளார் தனது 85வது அகவையில் 19.02.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

1962ம் ஆண்டில் யாழ். மறைமாவட்டக் குருவாக ஆயர் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை அவர்களினால் திருநிலைப்படுத்தப்பட்டு மறைமாவட்டத்தின் நல்லூர், ஊர்காவற்துறை, பேராலயம், நாவாந்துறை, மானிப்பாய், பாண்டியந்தாழ்வு ஆகிய பங்குதளங்களில் உதவிப்பங்குத்தந்தையாகவும் பங்குத் தந்தையாகவும் பணியாற்றியுள்ளதுடன் புனித மடுத்தீனார் சிறிய குருமட அதிபராகவும், "பாதுகாவலன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியராவும், புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளராகவும் புனித சவேரியார் குருமடத்தின் உப அதிபராகவும், உருவாக்குனராகவும், பல நிலைகளிலும் சிறப்பான பணியாற்றி யுள்ளார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் யாழ். ஆயர் தலைமையில் நடைபெற்றது. இறைவனடி சேர்ந்த அருட் தந்தையின் பணிவாழ்விற்காக இறைவனுக்கு நன்றி கூறி அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவோம்.

# முதுமெய்யியல்மாணிப் பட்டத்தினைப் பெற்றார் அருட்பணி அன்ரன் ஸ்ரீபன் அடிகள்



அருட்பணி அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரீகத்துறையில் மேற் கொண்ட கற்கை நெறியில் "முதுமெய்யியல்மாணி" (M.Phil) பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். கடந்த வாரம் யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 35வது பட்டமளிப்பு விழாவில் அடிகளாருக்கு இப்பட்டம் வழங்கப்பட்டது.

அருட்திரு ஸ்ரீபன் அடிகளார் இப்பட்டத்திற்கான ஆய்வுப்பொருளாக "ஊடகக் கற்கைநெறியில் திரு அவையின் படிப்பினைகளும் பாதுகாவலன் பத்திரிகையின் செயற்பாடுகளும்" எனும் தலைப்பைக் கொண்டு ஆய்வு செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# திருப்பாலத்துவசபைச் சிறார்களுக்கு கரவெட்டியில் சின்னம் சூட்டும் விழா



கரவெட்டிப்பங்கிலும் அதன் துணை ஆலயப்பங்குகளிலிருந்தும் நிரந்தர அங்கத்துவம் பெறும் சிறார்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்தவாரம் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது.

பயிற்றப்பட்ட சிறார்களுக்கான நிரந்தர அங்கத்துவ அட்டையையும் சின்னங்களையும் வழங்கும் திருப்பலியை திருப்பாலத்துவசபையின் மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி. எஸ். ஏ. றொஷான் அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார்.

இந் நிகழ்வுக்கான அனைத்து ஆயத்தங்களையும் பங்குத்தந்தை அருட்பணி C. ஜஸ்ரின் அடிகளாரும் அருட்சகோதரி மரியமலர் அவர்களும் செவ்வனே செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது



புனித கார்மேல் துறவற சபையின் பொதுநிலைப் பணியாளர்களுக்கான தவக்காலத் தியானம் கடந்த சனிக்கிழமை (06.03.2021) அச்சுவேலி புனித கார்மேல் கன்னியர் மடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அன்பியம் தொடர்பான கருத்துரையை யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி A. மில்பர் வாஸ் CMF அடிகளும் வளவாளர் திரு இ.அ. அமலரட்ணம் ஆகியோரும் வழங்கியிருந்தனர்.

# யாழ் ஆயரின் சகோதரர் கனடாவில் இறைபதம்



யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் சகோதரர் டாக்டர் கிறிஸ்ரி நவநீலன் ஞானப்பிரகாசம் அவர்கள் திடீர்சுகவீனம் காரணமாகக் கனடா ஒட்டாவா வைத்தியசாலையில் பெப்ரவரி 25ஆம் திகதி இறைபதம் அடைந்தார்.

24 செப்ரெம்பர் 1951 ஆம் ஆண்டு பிறந்த இவர் 25 பெப்ரவரி 2021 அன்று இறைபதம் அடைந்தார். அவரின் இறுதிச் சடங்குகள் 27 பெப்ரவரி 2021 அன்று வில்சன் இறுதிச் சடங்கு இல்லத்தில் ஆராதனையின் பின்னர் நடைபெற்றது. இவரின் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் எமது ஆயர் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் டாக்டர் நவநீலன் ஞானப்பிரகாசம் அவர்களின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற இறைவரம் வேண்டுகின்றோம்.



டாக்டர் நவநீலன் ஞானப்பிரகாசம் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக கடந்த திங்கட்கிழமை (08.03.2021) யாழ் பேராலயத்தில் குருக்கள் துறவிகள் ஆயருடன் இணைந்து இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து மன்றாடினார்கள்.

## ஆயரின் இதய நன்றிகள்

எனது அன்புச் சகோதரர் டாக்டர் கிறிஸ்ரி நவநீலன் ஞானப்பிரகாசம் (வயது 69) அவர்கள் கனடா ரொறென்ரோவில் திடீர் மரணம் அடைந்த துக்கச் செய்தி கேட்டு எமது துன்பத்தில் கலந்து கொண்டு பல வழிகளிலும் அனுதாபங்களைத் தெரிவித்து துயர் பகிர்வுச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எனது அன்பான நன்றிகள். குறிப்பாக யாழ் மறைமாவட்டக் குருக்கள் துறவியர் இறைமக்கள் மற்றும் இந்து மத அன்பர்கள் அனைவரையும் நன்றியோடு நினைவு கூருகிறேன்.

டாக்டர் கிறிஸ்ரி நவநீலன் ஞானப்பிரகாசம் அவர்கள் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாறவும் அவரின் குடும்பத்தார் இறை சித்தத்தை ஏற்று இத்துன்பத்தைத் தாங்கி வாழ இறை வரம் வேண்டுங்கள்.

பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை
யாழ் ஆயர்

# ஆனைக்கோட்டை, நவாலிப் பங்குகளில் தவக்காலத்தியானம்



தவக்காலத்தை முன்னிட்டு ஆனைக்கோட்டை மற்றும் நவாலிப் பங்குகளில் தவக்காலத் தியானம் மேற்கொள்ளப்பட்டது. இத்தியானமானது மார்ச் 03.04ம் திகதிகளில் ஆனைக்கோட்டையிலும், 09.10ம் திகதிகளில் நவாலிப்பங்கிலும் அருட்பணி இறபாயல் அடிகளாருடன் இணைந்த குழுவினரால் நடாத்தப்பட்டது. இத்தியானத்தை பங்குத்தந்தை அருட்பணி அலின் கருணாகரன் அடிகளார் ஒழுங்கு செய்திருந்தார்.

# புனரமைக்கப்பட்ட புனித லூர்து அன்னை கெபி



யாழ்ப்பாணம், சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் புனரமைக்கப்பட்ட புனித லூர்து அன்னை கெபி அண்மையில் பங்குத் தந்தையினால் ஆசீர்வதிக்கப்பட்டு, நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.